விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 13 செவ்வாய்க்கிழமை (25.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 068

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## ஏழு பேரையும் விடுவிப்பதற்கு சட்டப்படி எதிர்கொள்வேன்

### தமிழக முதல்வர் அறிவிப்பு

(சென்னை)

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும 7 பேரையும் விடுதலை செய்ய இந்திய மத்திய அரசு எதிர்ப்பதை சட்டப்படி எதிர்கொள்வோம் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.



ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் உட்பட 7 பேரை விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்தது. ஆனால் இதற்கு

20 ஆம் பக்கம் பார்க்க..

## ஆயுத விநியோகத்தில் அமைச்சர்களின் புதல்வர்கள்

### ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்களின் புதல்வர்கள் சிலர் இலங்கையில் புதிதாக உருவாகி வரும் பயங்கரவாத மற்றும் அடிப்படைவாத குழுக்களுக்கு ஆயுதங்களை விநியோகித்து வருவதை காணக் கூடியதாக இருக்கின்றது என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

துறைமுகத்திற்கு வந்திருந்த இரண்டு கொள்கலன்களை அமைச்சர்களின் இரண்டு மகன்கள் சுங்க விசாரணைகள் இன்றி வெளியில்

20 ஆம் பக்கம் பார்க்க..

## விசாரணை அதிகாரியை நவிபிள்ளை நியமிப்பார்

(ஜெனிவா)

இலங்கையின் வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற போர்க் குற்றங்களை கண்டறிந்து சர்வதேச விசாரணைகளை நடத்துவதற்காக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அதிகாரி ஒருவரை நியமிக்க உள்ளதாக தெரியவருகிறது.

இந்த விசாரணை அதிகாரியை நியமிப்பது தொடர்பில் இலங்கை அர

20 ஆம் பக்கம் பார்க்க..

## நோ பயர் ஸோன் தடையை நீக்க கோரிக்கை

(புதுடில்லி)

சனல் 4 தொலைகாட்சியின் நோ பயர் ஸோன் காணொளி மீதான தடையை இந்திய தணிக்கை குழு நீக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்பு சபையின் இந்திய கிளை வலியுறுத்தியுள்ளது.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றை இந்திய மன்னிப்பு சபை நேற்று வெளியிட்டுள்ளது. இதில்,

20 ஆம் பக்கம் பார்க்க..

# வடக்குக்கான உதவிகளை தெற்குக்கு திருப்ப முயற்சி!

## முதலமைச்சர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**வடக்கின் அபிவிருத்திக்கென வெளிநாடுகள் செய்ய முன்வரும் உதவிகளை தெற்குக்குத் திருப்ப அரசாங்கம் முயன்று வருவதாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன், இலங்கைக்கான ஜேர்மன் நாட்டு தூதுவர் வைத்திய கலாநிதி ஜர்கன் மோஹாட்டிடம் எடுத்துரைத்துள்ளார்.**



ஜேர்மன் நாட்டின் தூதுவர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று வருகை தந்தனர்.

ஜேர்மன் தூதுவர் தலைமையிலான இந்த குழுவினர் நேற்றுக் காலை கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்திற்கும் விஜயம்மேற கொணடனர்.

இதேவேளை சாவகச்சேரிப்பகுதியில ஜேர்மன் நாட்டின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட பால் பண்ணையையும் நேற்று பிற்பகல் ஜேர்மன் தூதுவர் திறந்து வைத்தார்.

இதனையடுத்து யாழ். கோவில் வீதியிலுள்ள

20 ஆம் பக்கம் பார்க்க..

## விபத்தில் சிக்கி முதியவர் பலி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் நேற்று பிற்பகல் 4.15 மணியளவில் இடம் பெற்ற இந்த விபத்தில் அப்பகுதியைச் கிருஸ்ணபிள்ளை கணேஸ் (வயது-72) என்றவயோதிபரே உயிரிழந்

20 ஆம் பக்கம் பார்க்க..



வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் ஜேர்மன் தூதுவர் சந்திப்பதை படத்தில் காணலாம்...

## ஒருநாட்டின் விருப்பமின்றி விசாரணை நடத்த முடியாது!

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் ஒரு நாட்டுக்கு எதிராக போர்க் குற்றம் தொடர்பான யோசனை கொண்டு வரப்பட்டு அதன் ஊடாக விசாரணைகளை நடத்த வேண்டுமாயின், சம்பந்தப்பட்ட நாட்டின் இணக்கம் தேவை என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய நாடுகள் மனித உரிமை குற்றச்சாட்டுக்களை சுமத்தி மீண்டும் இலங்கையை ஸ்திரமற்ற நிலைமைக்குள் தள்ள ஜெனிவா கூட்டத் தொடர் மூலமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற யோசனையை கொண்டு வரவுள்ளார்.

ஜெனிவா கூட்டத் தொடரில் போர்க குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற யோசனை நிறைவேற்றப் பட்டாலும் நாட்டின் இணக்கத்தை பெறாமல், ஆணைக்குழுவிற்கு தேவையான வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது என்றார். (எ-11)

## மத்திய அரசின் மனு வியாழனன்று விசாரணை

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் மேலும் 4 பேரை விடுதலை செய வதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை 27 ஆம் திகதி வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேரறிவாளன், முருகன், சாந்தன்

20 ஆம் பக்கம் பார்க்க..

## நாடுகடந்த தமிழீழ அரசை தென்னாபிரிக்கா நிராகரிப்பு

(கேப்டவுன்)

புலம்பெயர்ந்த தமிழர்களால் தோற்றுவிக்கப்பட்ட நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பது குறித்த யோசனை தென்னாபிரிக்க அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சிலவா

20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வானில் பறந்த தங்கச் செம்பை படம் பிடித்த மாணவன்

(திருகோணமலை)

தேவநம்பிய தீசன் மன்னனின் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் அமைக்கப்பட்டதாக கருதப்படும் ஹொரவபொத்தானை - குருகல் ஹின்ன பிரதேசத்தில் உள்ள மயானம் ஒன்றுக்கு அருகில் இருந்து சூரியனீ இருக்கும் திசை நோக்கி செம்பு போன்ற மர்மான பொருள் பறந்து சென்றுள்ளது.



மயானத்தில் இருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பஹல குடாப் பிட்டிய என்ற இடத்தில் தங்க நிறத்திலான செம்பு போன்ற ஒரு பொருள் காணப்பட்டுள்ளது.

அது சூரியன் இருக்கும் திசை நோக்கி பறந்து சென்றதை அந்த பிரதேசத்தை சேர்ந்த 14 வயதான பாடசாலை மாணவன் செல் போன் கமெராவில் படம் பிடித்துள்ளார்.

இது குறித்து கிருஷாந்த ஷாமல் பிரேம திலக்க என்ற அந்த மாணவர் கூறுகையில்,

நானும், அம்மாவும் அம்மம்மாவும் மாட்டு பட்டிக்கு சென்றோம். மாடுகள் பயந்து ஓடும் என்பதால் அம்மா என்னை திரும்பி போகுமாறு கூறினார்.

நான் வீதியில் நடந்து வரும் போது மின்னும் பொருள் ஒன்றை கண்டேன். அருகில் சென்று பார்க்கும் போது அது செம்பு வடிவத்தில் இருந்தது.

கையில் எடுக்க முயன்ற போது அது ஆடி ஆடி வானத்தை நோக்கி பறந்தது. அப்போது என் கையில் இருந்த எனது அப்பாவின் செல் போன் மூலம் அந்த பொருளை படம் பிடித்தேன்.

இதன் பின்னர் நான் இது பற்றி கிராம சேவகருக்கும், பிரதேச செயலாளர் அலுவலகத்தின் சுற்றாடல் அதிகாரிக்கும் தெரியப் படுத்தினேன். அவர்கள் வந்து பார்த்து விட்டு சென்றார்கள் என தெரிவித்தார். (எ-11)

# ஆசிரிய ஆலோசகர்கள் நாளை ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கங்களின் சம்மேளனத்தினால் "இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையை" ஸ்தாபிக்கும் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு கோரி நாளை 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு "இசுறுபாய" கல்வி அமைச்சின் முன்னால் மேற்கொள்ளப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கைக்கு எமது பூரண ஒத்துழைப்பினை வழங்குவோம் என வட மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முதற்கட்ட தொழிற்சங்க நடவடிக்கையாக நாளை 26 ஆம் திகதி கல்வி அமைச்சின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு வட மாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் பூரண ஒத்துழைப்பினை வழங்குவதோடு அன்றைய தினம் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட பன்னிரண்டு கல்வி வலயங்களிலும் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் சுகவீன விடுமுறையினை அறிவித்து இவ் ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்து எமது தொழில்உரிமைக்காக குரல் கொடுப்போம் என கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ஏ)

# டிப்பர் மோதி ஆசிரியை பலி

(குருமன்காடு)

வவுனியா, சாந்தசோலை சந்திக்கு அருகாமையில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு இடம்பெற்ற விபத்தொன்றில் ஆசிரியையொருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியாவில் இருந்து பளை நோக்கி சென்று கொண்டிருந்த புகையிரதப் பணியில் ஈடுபடும் இந்திய நிறுவனத்திற்கு சொந்தமான டிப்பர் வாகனமே பாடசாலை விட்டு வீடு நோக்கி சென்று கொண்டிருந்த ஆசிரியையின் மோட்டார் சைக்கிளில் மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்த ஆசிரியை வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வவுனியா புதிய சினக்குளம் அ.த.க பாடசாலையில் கல்விகற்பிக்கும் ஒரு வயது குழந்தையின் தாயான சுகன்யா அகிலன் (வயது-38) என்பவரே உயிரிழந்தார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை அப்பகுதி மக்கள் விபத்து சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பொலிஸாருடன் முரண்பட்டுக்கொண்ட நிலையில் சம்பவ இடத்திற்கு கலவரத்தடுப்பு பொலிஸார் வரவழைக்கப்பட்டிருந்தனர். (எ-250, 266)


**வீடு வாடகைக்கு**

நல்லூர் அரசடி வீதியில்
14-ம் இலக்க வீடு
வாடகைக்கு விடப்படும்.

(ஏ-6587)

தொடர்புகளுக்கு : 0770711521

**நிரந்தர வேலைவாய்ப்பு**

கொழும்பை அண்மித்த பகுதிகளில் Tea, Paint, Tin, Plastic Bag, கோழி இறைச்சி, Battery, Brush போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி லேபல் பொதியிடல் போன்ற பிரிவுகளில் 18-48 வரையான ஆண், பெண் இருபாலாருக்கும் 18,000/- -25000/- சம்பளத்துடன் உணவு, தங்குமிட வசதியுடன் நிரந்தர வேலைவாய்ப்பு.

தொடர்புகளுக்கு : 0766991993

விளம்பரத் தொடர்புகளுக்கு...
0213210815,0215671532
valampurii@yahoo.com


# பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதானவர் மேல்நீதிமன்றினால் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு முகமாலையில் வைத்து கைது செய்யப்பட்ட வவுனியா, ஈச்சங்குளம் பகுதியினைச் சேர்ந்த ஜெகநாதன் முகுந்தன் என்ற நபரை நேற்று யாழ். மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது.

2006 - 2007ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இராணுவத்தினருக்கு எதிராக தாக்குதல் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆம் திகதி மேற்படி நபர் முகமாலையில் வைத்து பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த நபருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன், குறித்த நபர் பூஸா தடுப்பு முகாமில் வைத்து பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவருக்கு வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ். மேல் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

மேற்படி வழக்கில் வேறு சாட்சிகள் உள்ளனவா? என்று பார்ப்பதற்காக மேற்படி வழக்கு நேற்று வரை ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து மேற்படி வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குறித்த நபருக்கு எதிராக வேறு சான்றுகள் நிரூபிக்கப்படாததால் மேற்படி நபரினை விடுதலை செய்யுமாறு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம பிரேமசங்கர் தீர்ப்பளித்தார். (எ-11)


**14-வது வீரர்களின் போர்**

தெல்லிப்பழை மகாஜன கல்லூரி

ஸ்கந்தவரோதயக் கல்லூரி

மகாஜனா
எதிர்
ஸ்கந்தா

காலம் : 26/02/2014, 27/02/2014
நேரம் : காலை 8.30 மணி
இடம் : தெல்லிப்பழை மகாஜன கல்லூரி

தலைவர்கள்

திரு.M.மணிசேகரம் (அதிபர், தெல்லிப்பழை மகாஜன கல்லூரி)

திரு.R.ஈஸ்வரதாசன் (அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

பிரதம விருந்தினர்
திரு. தியாகராஜா துவாரகேஸ்வரன் (மகாஜனன்)
முகாமைத்துவ பணிப்பாளர்
ஈஸ்வரன் ரான்ஸ் போட்

கௌரவ விருந்தினர்
திரு. நாகலிங்கம் வரதராஜன் (மகாஜனன்)
பிரான்ஸ்

சிறப்பு விருந்தினர்
திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் (ஸ்கந்தவரோதயம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


தெல்லிப்பழை மகாஜன கல்லூரி

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

(5687)



**திருமுறிகண்டீஸ்வரர் ஆலய வசந்த மண்டப கல்நாட்டு நிகழ்வு 2014-02-27 வியாழன்**











அருளும் அற்புதமும் நிறைந்த திருமுறிகண்டி திருப்பதியில் பழமை வாய்ந்த சிவாலயம் பல வருடங்களுக்கு முன்பு அமைக்க முனைந்தபோது அது கைகூடவில்லை. 2011-04-20 ஆம் திகதி இறை அருளாலும் சமயப் பெரியோர்களாலும் கிளி/மகாதேவ ஆச்சிரம சுவாமி, நல்லை ஆதீன முதல்வர் ஆசியுடனும் அந்தணப் பெரியோர்களும் ஒன்றுகூடி அத்திபாரக்கல் நாட்டப்பட்டது.

இந்து கலாசார அமைச்சு, உதவி நலன்விரும்பிகள் குறிப்பாக பஸ் பயணிகளிடமும் பணம் சேர்க்கப்பட்டு முறிகண்டீஸ்வரர் ஆலயம் அமைக்கப்பட்டு வருகிறது. அத்தோடு 2014-02-02 அன்று மணிக்கோபுரம் கல்நாட்டும் நிகழ்வு நடைபெற்றது. இந்திய சிற்பி புருசோத்தமன் அவர்களால் இவ் ஆலயம் அமைக்கப்பட்டு வருகிறது. மணிக்கோபுரமும் 41 அடி உயரத்தில் அமைக்கப்படுகிறது. அத்தோடு 27.02.2014 சிவராத்திரி தினத்தன்று காலை 7.59 தொடக்கம் 9.29 வரை உள்ள சுபநேரத்தில் வசந்த மண்டபம், மகா மண்டபம், வைரவர் அத்திபாரக் கல் நாட்டும் நிகழ்வும் அத்தோடு அபிஷேகம், மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது. இந்த சிவராத்திரி புனித நாளிலே இவ் ஆலயத்திற்கு வருகைதந்து இறை அருளை பெற்றுக் கொண்டு இந்நிகழ்வினையும் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

திருமுறிகண்டீஸ்வரர்
T.P 0770569794

(சீ-6856)

தலைவர்
ஆலய பரிபாலன சபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பிளாஸ்க்

சூடான பானத்தை சுடுநீர்ப்போத்தலில் ஊற்றுவதற்கு முன்னர் சற்று வெதுவெதுப்பான வெந்நீரை ஊற்றி ஐந்து நிமிடங்கள் வைத்து விட்டு அதன் பின் அதை வெளியே ஊற்றிவிட்டு சூடான பானத்தை ஊற்ற வேண்டும். அப்படி ஊற்றினால் நீண்ட நேரத்திற்கு சூட்டைத் தாங்கும் வல்லமை அந்தச் சுடுநீர்ப்போத்தலுக்கு வந்து விடும்.

சுடுநீர்ப்போத்தல் என்று சொல்கிறோம் அல்லவா? கோப்பி, தேநீர், பால் போன்ற சூடான பானங்களை எல்லாம் ஊற்றி வைப்பதற்கு அது பயன்படும். அந்தச் சுடுநீர்ப்போத்தல் இல்லாத வீடுகளே இப்போது இல்லை என்று சொல்லலாம். ஏனென்றால் அந்த அளவுக்கு சுடுநீர்ப்போத்தல் மனித வாழ்க்கையோடு ஒன்றிப் போய் விட்டது. அதனை எந்தச் சூழ்நிலையிலும் பயன்படுத்துகிறோம். ஆனால் இந்த சுடுநீர்ப்போத்தல் எப்படி சரியாகப் பயன்படுத்துவது, எப்படி நீண்டகாலம் அதை உழைக்க வைப்பது. அதன் பயனை எப்படி முழுமையாக அனுபவிப்பது என்பதையெல்லாம் தெரிந்து கொள்வது முக்கியமில்லையா? எந்த ஒரு பொருளானாலும் அந்தப் பொருளின் முழுப்பலனையும் எப்படி அனுபவிக்கிறது என்பது பற்றி நமக்கு தெரிந்திருக்க வேண்டும் அல்லவா? சுடுநீர்ப் போத்தல் பற்றி சில குறிப்புக்கள் இருக்கிறது. சுடுநீர்ப்போத்தலில் ஊற்றப்படுகிற அந்த பானத்தின் சூட்டை அதிக நேரமாக அது தாக்குப்பிடித்து வைத்திருக்க வேண்டுமென்றால் அதை முழுமையாக நிரப்ப வேண்டும். பாதியோ அல்லது கால்வாசியோ முக்கால்வாசியோ நிரப்பினால் அது அதிக நேரம் சூட்டைத் தாக்குப்பிடிக்காது. அதனால் அதை நிரப்பும் போது அடுத்தது சுடுநீர்ப்போத்தலில் ஊற்றப்படுகிற பானம் மிகவும் அதிகமான சூடானதாக இருக்க வேண்டும். அதேபோல் குளிர்பானமாக இருந்தால் அதிக குளிர்ச்சியானதாக அது இருக்க வேண்டும்.

சூடான பானத்தை சுடுநீர்ப்போத்தலில் ஊற்றுவதற்கு முன்னர் சிறிது வெதுவெதுப்பான வெந்நீரை அதில் ஊற்றி ஒரு ஐந்து நிமிடங்கள் வைத்திருந்து விட்டு அதன் பின்னர் அதை கொட்டி விட்டுத்தான் சூடான பானத்தை அதில் ஊற்ற வேண்டும். அப்படி ஊற்றினால் நீண்ட நேரத்துக்கு சூட்டைத் தாக்குப்பிடிகின்ற வல்லமை அந்த சுடுநீர்ப்போத்தலுக்கு வந்து விடும்.

சில நேரம் பாலை சுடுநீர்ப்போத்தலில் ஊற்றி வைத்து விடுகிறோம். அது சில நேரத்தில் திரைந்துபோய் விடுகிறது. அப்படி அது திரைந்து போகாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்றால் அதிகளவு ஊற்ற வேண்டும். அதை ஊற்றுவதற்கு முன் னால் சுடுநீர்ப்போத்தலை சூடான அல்லது குளிர்ந்த பானத்தை ஏற்கிற அளவுக்கு தட்ப வெப்ப நிலைக்குத் தயார் செய்ய வேண்டும். நாம் முதலில் சொன்னோம் இல்லையா. அது மாதிரி வெது வெதுப்பான பாலை சுடுநீர்ப்போத்தலில் ஊற்றினோம் என்றால் அது திரைந்து போவதற்கு அதிகமான வாய்ப்பு இருக்கிறது. பாலை ஊற்றி விட்டு மூடுகிறது. அந்த சுடுநீர்ப்போத்தலின் மூடியையும் வெந்நீரால் நன்றாக கழுவிவிட்டு அதன்பின்தான் மூட வேண்டும்.

சுடுநீர்ப்போத்தலில் தேநீரை ஊற்றி வைக்கிறோம். அது நீண்ட நேரத்துக்குச் சுவை குன்றாமல் இருக்க வேண்டுமென்றால் அதற்கும் ஒரு வழி இருக்கிறது. அதாவது அந்த தேநீரை நன்றாக வடிகட்டி விட்டு அதற்குப் பின்புதான் சுடுநீர்ப்போத்தலில் ஊற்ற வேண்டும். அந்த தேநீரோடு துணுக்கள் ஏதும் இருந்தால் தேநீர் சுவை இழந்து போவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கிறது.

சுடுநீர்ப்போத்தலை உபயோகப்படுத்தாத நேரத்தில் அதை திறந்து வைத்துவிட வேண்டும். சில சுடுநீர்ப்போத்தல்களை தலைகீழாகக் கூட தொங்கவிட முடியும். அப்படி தொங்க விடுவதால் திறந்திருக்கிற சுடுநீர்ப் போத்தலினுள் கரப்பான், ஈ மாதிரியான பூச்சிகள் இருக்கும். அதனாலே தலைகீழாகத் தொங்க விட்டு திறந்த நிலையில் சுடுநீர்ப்போத்தலை வைத்து விட வேண்டும்.

சுடுநீர்ப்போத்தலில் சிறிய சிறிய ஐஸ்கட்டிகளை போடும்போது சுடுநீர்ப்போத்தலை நேரே நிற்க வைத்து அதைப் போடக்கூடாது. சற்று சாய்த்து விளிம்பு வழியாக கொஞ்சம் கொஞ்சமாக இறங்குவது மாதிரி போடவேண்டும். சுடுநீர்ப்போத்தலில் இருந்து ஐஸ்கட்டிகளை எடுக்கும் போது, உலோகக் கரண்டிகளை பயன்படுத்தக் கூடாது. ஏனென்றால் அதனால் உள்ளே இருக்கிற ரீபிள் உடைந்து விட வாய்ப்பிருக்கிறது. இப்படியெல்லாம் சில நுட்பமான விடயங்களை சொல்கிறார்கள். இவ்விதமாக முறைப்படி பயன்படுத்தினால் சுடுநீர்ப்போத்தலை மட்டுமல்ல நம்முடைய எல்லா பொருட்களையும் பழுதடையாமல் நீண்ட காலத்துக்கு உபயோகப்படுத்த முடியும்.

ஒரு சுடுநீர்ப்போத்தலில் சூடான பானத்தை ஊற்றும் போது நன்றாக வடிகட்டி விட்டு ஊற்ற வேண்டும் என்று சொல்லுகிறோமல்லவா, அப்படித்தான் ஒரு வீட்டில் அந்த வீட்டுச் சமையல்காரன் என்ன செய்தான் என்றால், ஒரு சுடுநீர்ப்போத்தலில் தேநீர் ஊற்றுகிறான்.

அப்போது வடிகட்டி எதுவும் கிடைக்கவில்லை. உடனே ஒரு கைக்குட்டையை எடுத்து சுடநீர்ப்போத்தலில் மேலே போட்டு அதில் தேநீரை ஊற்றி வடிகட்ட ஆரம்பிக்கிறான். முதலாளி இதைப் பார்த்து விட்டார்.

"ஏம்பா, கைக்குட்டையை வீணாக்குகிறாய்" என்றார். அதற்கு சமையல்காரன், "பதற்றப்படாதீர்கள் முதலாளி! அது ஒன்றும் நல்ல கைக்குட்டை இல்லை. மிகவும் அழுக்கான கைக்குட்டை தான். அது பிரளயோசனப்படாது போனாலும் பரவாயில்லை. அதனால் தான் வடிகட்டுகிறேன்". என்றான். "கைக்குட்டை அழுக்கு உள்ளே போனால் என்ன ஆகும்" என்று பதறினார் முதலாளி.

இளசை சுந்தரம்

# நீதி கேட்கும் குரல் முழக்கம்; பாரிய ஆர்ப்பாட்டம் நாளை

இலங்கை ஜனாதிபதியை போர்க்குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றக் கூண்டில் நிறுத்த வலியுறுத்தி நாளை "நீதி கேட்கும் குரல் முழக்கம்" ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று வைகோ கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், கூறியுள்ளதாவது,

இலங்கை அரசையும், கூட்டத்தையும் சர்வதேச நீதிமன்றக் கூண்டில் ஏற்றுக! தண்டனை தருக! அதற்கு சுதந்திரமான சர்வதேச நீதி விசாரணையை அனைத்துலகம் நடத்துக! சுதந்திரத் தமிழ் ஈழம் மலர தமிழ் ஈழத்திலும், தரணிவாழ் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் பொதுவாக்கெடுப்பு நடத்துக! என மனித குலத்தின் மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டுகிற நாள்தான் பெப்ரவரி 26 ஆகும்.

வீரத் தியாகி முத்துக்குமார் தீக்குளித்த ஐந்தாவது நினைவு நாளான ஜனவரி 29இல் நெதர்லாந்து நாட்டிலிருந்து புறப்பட்டு, பனி படர்ந்த நிலங்கள் வழியே விடுதலைப் புலிகளின் பதாகை ஏந்தி வீர முழக்கமிட்டு, ஈழத்து இளம் தமிழர்கள் ஜெனீவா நோக்கி நடக்கின்றனர்.

தியாக தீபம் முருகதாசன் தீக்குளித்து மடிந்த மார்ச் 10 ஆம் திகதி ஜெனீவாவின் மனித உரிமைகள் ஆணைய கட்டடத்துக்கு எதிரே உள்ள முருகதாசன் திடலில் திரளும் இலட்சக் கணக்கான ஈழத் தமிழர்களோடு அவர்கள சங்கமித்து நீதி கேட்டு எழுப்பும் முழக்கம் விண் முட்ட எழும்.

அதற்குக் கட்டியம் கூறும் வகையில் நாளை புதன் கிழமை தாய்த்தமிழகத்திலும், உலகெங்கிலும் நீதிக்கான போர் முழக்கத்தை எழுப்புவோம். தமிழ்நாட்டில் தலைநகர் சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும், பிற இடங்களிலும் நாளைய தினம் காலை 11 மணிக்கு சாதி, மதம், கட்சி எல்லைகள் கடந்து நீதி கேட்கும் பட்டயங்கள் ஏந்தி ஆர்ப்பரித்து முழக்கமிட அழைக்கிறேன் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கையின் சட்டத்துறை முஸ்லிம் மயமாகின்றது

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சட்டத்துறைக்குள் முஸ்லிம் மயத்துவத்தை மேற்கொள்வதற்கு நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் முனைவதாக அரசாங்கத்தின் இணைக்கட்சியான ஜாதிக ஹெல உறுமய இந்தக்குற்ற ச்சாட்டை சுமத்தியுள்ளது.

கட்சியின் ஊடகச்செயலாளர் நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க மேல்மாகாணசபை தேர்தல் பரப்புரை அறிக்கை ஒன்றில் இந்தக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தமது அமைச்சில் அதிகமான முஸ்லிம்களுக்கு பதவிகளை வழங்கியுள்ளார்.

அத்துடன் சமாதான நீதவான் பதவிகளும் அதிகளவில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மறுமுனையில் சிங்கள மாணவர்களுக்கு சட்டக்கல்லூரி விடய த்தில் நீதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் 551 சட்டக்கல்லூரிக்கு புதுமுக சிங்கள மாண வர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

எனினும் இவ்வருடத்தில் 177 பேர் மாத்திரமே இணைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 10 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 |
| கோவா | 20 | 40 | 50 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 20 | 40 | 40 |
| புடோல் | 30 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 60 | 60 |
| பாகற்காய் | 50-90 | 100 | 140 |
| வெண்டிக்காய் | 50-80 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 20 | 50 | 50 |
| பயற்றங்காய் | 70 | 90 | 80 |
| லீக்ஸ் | 40 | 80 | 80 |
| பீற்றூட் | 35 | 40 | 50 |
| கறிமிளகாய் | 90 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 400 | — | — |
| போஞ்சி | 30 | 60 | 80 |
| கத்தரிதம்புள்ள | 20 | — | — |
| கீரை - 1 பிடி | 5-10 | 15 | 15 |
| தேசிக்காய் | 20-35 | 40 | 40 |
| [illegible] | 20-60 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 50-80 | 90 | 100 |

# இராசி பலன்

25.02.2014
(மாசி 13, செவ்வாய்க்கிழமை )
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
ஏகாதசி முன்னிரவு 11.44 மணிவரை
பூராடம் பின்னிரவு 2.32 மணிவரை
இராகுகாலம் 3.29-4.59 மணிவரை
சுபநேரம் 10.59-12.29 மணிவரை
ஏகாதசி விரதம்

**மேடம்** இழுபறியாக இருந்த பிணக்குகளில் வெற்றி கிடைக்கும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொழில் ரீதியாக இருந்த மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்** அடுத்தவர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது நல்லது, தேகநலன்கள் பாதிக்கப்படலாம்.

**மிதுனம்** தொழில் வளர்ச்சி அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**கடகம்** உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொலைபேசி மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும்.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**கன்னி** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர் ,பெற்றோரின் தேவைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**துலாம்** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்** வாய்ப்புக்கள் தேடிவரலாம், உறவினர் வருகையுண்டு, நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், மாதர் நட்புண்டு, சுப விரயங்கள் கூடும்.

**தனுசு** ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவ்து நல்லது, ஆழ்ந்த சிந்தையுண்டு.

**மகரம்** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சஞ்சலங்கள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், பிதா சிந்தையுண்டு, பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கும்பம்** தித்திக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 59 ஆவது ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும்

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநா யகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 59 ஆவது ஆண்டுவிழாவும் சிவ ராத்திரி விழாவும் எதிர்வரும்27 ஆம் திகதி வியாழக் கிழமை பி.ப 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் இரா. செல்வவடிவேல் தலை மையில் நடை பெறவுள்ளது


இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ஓய்வு நிலை அதிபர் சு.தியாகலிங்கம் கலந்துகொள்ளவுள் ளார்.

ஆசியுரையை ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ கா.சதானந்தசர்மாவும் வாழ்த்துரையை ஆலய தர்மபரிபாலன சபை தலைவர் செ. சுப்பிர மணியமும் வழங்குவார்கள்.

அகில இலங்கைத்திருமுறை மன்ற அமைப் பாளர் சி.கிருஷ்ணமூர்த்தியை கௌர விக்கும் நிகழ்வும் மிருசுவில் அ.த.க பாடசா லைக்கான விசேட பரிசில் வழங்கும் நிகழ் வுடன் கடந்த 2013 ஆம் ஆண்டு நடை பெற்ற சைவசமய அறிவுப் பரீட்சை, நீதி நூல் மனனப்போட்டி ,கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல் முறைப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக் கான பரிசில்கள் வழங்கல் நிகழ்வும் இடம் பெறவுள்ளன


அதனைத்தொடர்ந்து சிவராத்திரி நான்கு சாம பூசைகளாக இரவு 8மணிக்கு முதலாம் சாமப்பூசையும் இரவு 11 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் நள்ளிரவு 12 மணிக்கு 2 ஆம் சாமப்பூசையும் அதிகாலை 3 மணிக்கு 3ஆம் சாமப்பூசையும் அதிகாலை 5 மணிக்கு 4 ஆம் சாமப்பூசையும் நடைபெறவுள்ளன. (அ-2)

நன்றி:-மிரர்



# எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு விசாரணை மூலம் தீர்வு கிடைக்க வேண்டும்

## சுரேஷ் எம்.பி தெரிவிப்பு



(சாவகச்சேரி)

எம் இனத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு உள்நாட்டில் பாகுபாடற்ற விசாரணைகள் நடத்த நீதி கிடைக்காவிடின் சர்வதேச விசார ணையைத் தவிர வேறு வழியில்லையென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப் பிட்டுள்ளார்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி யின் இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில், எம் இனம் பாரிய யுத்தத்தினை சந்தித்தது. இதில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக ஐ.நாவின் கணிப்புக்கள் சுட்டிக்காட்டினாலும் சுமார் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது எனத் தெரியாத நிலையிலே நாம் உள்ளோம்.

இந்நிலையில் இலங்கை அரசு இங்கு எவ்வித உயிரிழப்புக்களும் ஏற்படவேயில்லை என கண்மூடித்தனமாக கூறி வருகின்றது.

ஆயினும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் விமோசனம் கிடைக்க வேண்டும். பாதிப்பின் உண்மைகள் கண்டறி யப்பட்டு குற்றம் இழைத்தவர்கள் தவறை உணர வேண்டும்.

அத்தோடு அதற்கான பரிகாரமும் செய் யப்பட வேண்டும். அவ்வாறு இடம் பெறா விடின் சர்வதேச விசாரனை உறுதியாக நடை பெறும். யுத்தத்தின்பாதிப்புக்களிலிருந்துவிடுபட்டு எழ வேண்டுமாயின் மாணவர்களும் முன் னேற வேண்டிய வழிவகைகளை பயன்படுத்த வேண்டும்.

புலம் பெயர் உறவுகள் கஷ்டப்பட்டு மாண வர்களின் முன்னேற்றங்களுக்கு பல வழி களில் உதவுகின்றனர்.

அவற்றை மாணவர்கள் உதாசீனம் செய்யக் கூடாது. மாணவர்களுக்கு போஷாக்கு பெரிய பிரச்சினையாகவுள்ளதென புள்ளி விபரங் களினூடாக அறிய முடிகிறது.

அதனை நிவர்த்தி செய்வதற்கு புலம் பெயர் உறவுகளின் உதவியுடன் சிறந்த திட்டம் தீட்டப்படுவது முக்கியம்.5 வருடங்களிற்கு பின்னர் எமது மாணவர்களின் அடைவு மட் டங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஆயினும் சர்வதேச ரீதியாக போட்டி போடக் கூடிய அளவிற்கு உயர்வடைய கல்விச் சமூக த்தினர் ஊக்கம் அளிக்க வேண்டும்.

ஒரு செயலாளரை நியமிக்கும் அதிகாரத் தைக் கூட அரசு மாகாண சபைக்கு வழங்க வில்லை. சட்டத்தில் இடமிருந்தும் அதற்கான அனுமதியை அரசு தடுத்து வருகின்றது.

இந் நிலையிலுள்ள அரசு எவ்வாறு நீதி யான விசாரணை நடத்தும். எனவேதான் எமக்கு நீதியான சர்வதேச விசாரணை தேவை யென வலியுறுத்துகின்றோம். அச் சூழ்நிலை உருவாகி வருகின்றது.

ஆயினும் எமது நாட்டில் ஐக்கியமாக அடிமைகளின்றி சமமான பிரஜைகளாக வாழ விரும்பும் எம்மை வாழ விடுவார்களா? என்றார். (அ-9-29)

# கால்நடை வளர்ப்போருக்கு செயலமர்வு இன்றையதினம்

(தும்பளை)

கால்நடை வளர்ப்போருக்கு நன்முறை களைப் புகட்டல் எனும் தொனிப்பொருளில் செயலமர்வு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை தசாவதானி கதிர வேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கும் கூட்டு றவுச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை உரையினை கால்நடை அபிவிருத்தித் திணைக்கள அதி காரி சறோஜினி ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து கால்நடை பராமரிப்பு, கன்று வளர்ப்பு, பசுமாடுகள் பராமரிப்பு, இனப் பெருக்கம் ஆகிய தலைப்புக்களில் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் சித்திர வடிவேல் கருத்துக்களை வழங்கவுள்ளார்.

அத்தோடு கால்நடை நோய்களிலிருந்து விடுபடல் மற்றும் நோய் தடுக்கும் வழி முறைகள் எனும் பொருளில் வைத்திய கலாநிதி சகுந் தலா விளக்கம் அளிக்கவுள்ளார்.

கால்நடை வளர்ப்போருக்கு கிடைக்கக் கூடிய வசதி வாய்ப்புக்கள் எனும் பொருளில் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

எனவே, கால்நடை வளர்ப்போர், ஆர் வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளு மாறு சங்கத்தின் ஒருங்கிணைப்புக்குழு அறி வித்துள்ளது. (அ-9-19)

# நிர்வாகத் தெரிவு

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு தசாவதானி கதிரவேற் பிள்ளை சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நிலைய மண்டபத்தில் இடம் பெற்றபோது இவ்வாண்டுக்கான புதிய நிர் வாகத் தெரிவு செய்யப்பட்டது.

இதன்படி தலைவராக ப.சிவசுப்பிரமணியம், உப தலைவர்களாக வே.நடராசா, க.பத்ம சாமி, செயலாளராக சி.தவச் செல்வன், உப செயலாளர்களாக அ.ஜெயக்கிருஷ்ணா, க.ஆறு முகம், பொருளாளராக வி.சுகந்தன் ஆகி யோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக செ.விக்னேஸ் வரன், கா.யோகரட்ணம், அ.ஜெயநிமலன், கு.பிரபாகர், ந.நிரஞ்சன், க.ஜெயதாஸ், க.கிரு சாந்த், சி.ஜெனகன்,காப்பாளர்களாக க.தங் கராசா, மு.தர்மலிங்கம், அ.நவரட்ணராசா, கணக்காய்வாளராக இராமச்சந்திரன் ஆகி யோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-9-10)




# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவு தெற்கு கடற் பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடு பட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 29 பேரையும் எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நதிமன்ற நீதவான் எஸ். லெனின்குமார் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர்படுத்தியபோதே நீதவான் இந்த உத்த ரவை பிறப்பித்தார்.

இந்தியாவின் புதுக்கோட்டை மாவட்டத்தின் ஜகதாப்பட்டிணப் பகுதியிலிருந்து 7 இழு வைப்படகுகளில் வந்த 29 இந்திய மீன வர்களையும் கடந்த 12 ஆம் திகதி காங் கேசன்துறை கடற்படையினர் கைதுசெய்து யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இந் நிலையில் இவர்கள் 29 பேரையும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் கடந்த 13 ஆம் திகதி ஆஜர்படுத்தியபோது இவர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-6)




மாதகல் லூர்த்து கெவித் திரு விழாவை முன்னிட்டு புனித தோமை யார் கலையரங்கில் அண்மையில் கம்பர்மகன் கூத்து அரங்கேற்றப்பட்டது. 10 வருடங்களுக்கு பின்பு மாதகல் பகுதியில் பல கலைஞர் களைக் கொண்டு மீண்டும் இக் கூத்து மேடையேற்றப்பட்டது.இந் நிகழ்விற்கு பிரதம விருந் தினராக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் வண ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கியதுடன் அண்ணாவி மாரையும் கௌரவித்தார். (படங்கள்:மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## University of Jaffna, Sri Lanka
### PROCUREMENT NOTICE
### HIRE/ LEASE OF VEHICLES WITH FUEL

Quotations are called for under mentioned unregistered or registered vehicles (either date of first registration should be not later than 05 years or date of manufacturing should be not later than 07 years from the date of tender) from owners or companies for hire/lease for one year on monthly payment basis. Successful bidders are required to supply fuel.

| Vehicle Type | Fuel Requirement | Qty |
|---|---|---|
| Passenger Van (14 or 15 seater) or more | Diesel (Dual A/C) | 01 |

A complete set of bidding documents may be purchased on or before 06.03.2014 by any bidder on submission of a written request to the Senior Assistant Registrar (Administration) and upon production of a receipt in respect of payment of a non refundable fee of Rs. 1000.00 to the Shroff of the University of Jaffna between 9.00 a.m. and 3.00 p.m. on any working day or Peoples Bank AC 162100160000880 Bidders may also examine the bidding documents free of charge.

Bid must be delivered or sent under registered post on or before 2.00 p.m. on 11.03.2014 and will be opened immediately thereafter. Bidder or his authorized representative (with a letter of authorization) is allowed to be present at the time of opening of bids. The tenders should be enclosed in a sealed envelope and marked as "Hire/Lease of Vehicles with fuel. Tender No. UJ/Admin/HV 2014" on the top left of the envelope. Tenders to be sent either by registered post to the Chairman, Procurement Committee, University of Jaffna, P.O Box 57, Jaffna or deposited in the tender box at the Registrar's Office of the University of Jaffna.

The selected vehicles will be utilized at the Faculty of Engineering situated at the Ariviyal Nagar, Kilinochchi.

Further details could be obtained from the Senior Assistant Registrar/Administration on telephone No. 021 222 6517.

**Chairman,**
**Procurement Committee,**
**University Of Jaffna,**
**Jaffna.**
**24.02.2014**

(சி-6585)

# பெருந்தொகையான போதைப்பொருள் இலங்கைக்கு கடத்தப்படுகின்றது

## கயந்த எம்.பி.தெரிவிப்பு

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது வேட்பாளர்களை ஒரு இடத்தில் வைத்து கொள்ள முடியாத நிலைமைக்கு சென்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் இந்த நிலைமையை காணும் போது தமக்கு அரசியலில் ஈடுபடுவது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில,

ஆளும் கட்சி ஆட்சியை கைப்பற்றுவதற்காக வீரவன்சவின் பஞ்சாயத்தையும் ஜாதிக ஹெல உறுமயவின் சங்கையும் எடுத்து கொண்டு வந்தனர். மக்களின் அரசாங்கத்தை ஏற்படுத்துவதாகவும் தர்ம இராச்சியத்தை உருவாக்க போவதாகவும் கூறினர். மதுவுக்கு முற்றுப்புள்ளி என்றும் தெரிவித்தனர்.

எனினும் ஆசியாவிலேயே பெருந்தொகை போதைப் பொருள் இலங்கைக்கே கொண்டு வரப்பட்டது. பல எதேனோல் கொள்கலன்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன.

இவற்றை யார் கொண்டு வருகின்றனர் என்பது தெரியாது. நாட்டில் மேல் மட்டத்தில் இருப்பவர்களே இவற்றுக்கு அனுமதியை வழங்குகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தென்னாபிரிக்க அனுபவத்தின்படி உள்நாட்டு பிரச்சினைக்கு தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

தென்னாபிரிக்க அனுபவத்தின் அடிப்படையில் இலங்கையில் உள்நாட்டு தீர்வு எட்டப்படும் என அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். எனினும் தென்னாபிரிக்காவில் பேசப்பட்ட விடயங்களை முழுமையாக வெளியிட அவர் மறுத்து விட்டார்.

தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் பிரச்சினைகள் ஒரே மாதிரியானவை அல்ல. எனினும் தென்னாபிரிக்காவை போன்றே இலங்கையிலும் பிரச்சினையை உள்நாட்டிலேயே தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்

பிபிசிக்கு அளித்த செவ்வியின் போது இலங்கை போருக்கு பின்னர மேற்கொண்டு வரும் முயற்சிகளை தென்னாபிரிக்கா வரவேற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அதேநேரம் தென்னாபிரிக்க தரப்பு இலங்கையில் தீர்வு ஒன்றை திணிக்க தயாரில்லை என்றும் டக்ளஸ் குறிப்பிட்டார். (அ-2)

# யாழ். மாநகரசபை மாதாந்த பொதுக்கூட்டம்

யாழ்.மாநகரசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத் தில் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடை பெறும் என செயலாளர் சி.தா. தர்மரட்ணம் அறிவித்துள்ளார். (அ-2)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1963 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: 15 ¼<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / பாமசி<br>தொ.இ: B/1031 | பிறப்பு: 1977 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 25 ½ சூரி செவ் 6 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்<br>தொ.இ: G/1498 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 42 சூரி செவ் 6 ல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L / முகாமையாளர் (ஜேர்மன் PR)<br>தொ.இ: B/1036 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 28 ½ செவ் 2 ல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/1500 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா: 44 ¼ உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L / பிளமிங், வயறிங்<br>தொ.இ: B/1040 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 79 செவ் 8 ல்<br>உயரம்: 4'6"<br>தகைமை/தொழில்: L.L.B பட்டதாரி / சட்டத்தரணி<br>தொ.இ: G/1501 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: 18 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் (UK – Work Permit)<br>தொ.இ: B/1046 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 21 ½ உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: CIMA (Stage III) / உதவி கணக்காளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது!<br>தொ.இ: G/1505 |


## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)





## கதவைத் திறக்க கற்றுக்கொள்ளுங்கள்!

கல்வி உலகு வேறு வேலைஉலகு வேறு
வேலைவாய்ப்பை நோக்காக கொண்ட கல்வியே
தனித்துவமானது.

- பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து விட்டீர்களா?
- கணனி அறிவுடையவரா?
- தொழில் தேடுபவரா? ( முழுநேர / பகுதிநேர)

வயது வேறுபாடு எதுவுமின்றி
உங்களின் வேலைவாய்ப்புக்கென வடிவமைக்கப்பட்ட
குறுகியகால கற்கைநெறி.
வீட்டிலிருந்தே வருமானம் ஈட்டலாம்

முதலாவது கற்கைநெறி விரைவில் ஆரம்பமாகவுள்ளது.
மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால்
உங்கள் சுயவிபரங்களை தொலைபேசி இலக்கத்துடன் தாமதமின்றி
பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்
தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் அறிமுக செயலமர்வுக்கு அழைக்கப்படுவர்

jfxacademy@gmail.com

(சி-6582)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு ஆயுதமுனையில் வெற்றி பெற்றிருந்தாலும் ஜனநாயக ரீதியில் தோல்வியையே சந்தித்துள்ளது

## மாவை எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களை ஆயுத முனையில் அரசாங்கம் வெற்றி பெற்றிருந்தாலும் ஜனநாயக ரீதியில் வடக்கில் அரசாங்கம் தொடர் தோல்வியையே கண்டு வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தீவகப்பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர், வடக்கு மாகாணசபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் பா.கஜதீபன், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட இளைஞரணியின் செயலாளர் ப.தர்சானந், சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர் ஞா.கிஷோர் உள்ளிட்டவர்கள் அப்பகுதி மக்களுடன் சந்திப்புக்களில் ஈடுபட்டனர்.

இதன்போது ஊர்காவற்றுறை நாரந்தனைப்பகுதியில் காலை 10 மணியளவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களை உள்நாட்டில் தோற்றுப் போனதாகக் கூறுகின்ற இந்த அரசாங்கம் சர்வதேச ரீதியாகவே இரண்டு தடவைகள் தோற்றுப் போயிருக்கின்றது. இந்நிலையில் மூன்றாவது முறையாகவும் தோற்றுப் போய் விடுமோ என்ற அச்சத்தில் உள்ளது.

தமிழ் மக்களைத் தோற்றுப் போன இனமாக அரசாங்கம் சித்திரித்து வருகின்ற நிலையில் இங்கு போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்திருக்கின்ற போதும் ஜனநாயக ரீதியாக தமிழ் மக்கள் பல வெற்றிகளைப் பெற்றிருக்கின்றனர். இந்நிலையில் மூன்றாவது முறையாகவும் சர்வதேச ரீதியாக அரசாங்கமே தோற்கப் போகின்றது.

இங்கு நடைபெற்ற போரினால் மக்கள் இன்று சகலதையும் அதாவது அழிவுகளையும் இழப்புக்களையும் இழந்து வாழ்வாதாரத்திற்கே போராடி வருகின்றனர். இந்த மக்களுடைய வாழ்வாதார ரீதியிலான முன்னேற்றத்திற்கே அனைவரும் உழைக்க வேண்டும்.

போரில் தர்ம நியாயம் இருக்கின்றது. ஆனால் அத்தனையையும் மீறி இராசாயனக் குண்டுகள் பாவிக்கப்பட்டு அரசாங்கம் போர் விதிமுறைகளை மீறி செயற்பட்டது.

இவ்வாறு எமது இழப்புக்கள் ஏராளம். இந்த துன்ப துயரங்கள் இன்றும் தொடர்கின்றன. இந்த இழப்புக்களுக்கு உரிய பதில்கள் இல்லை என்பதுடன் இந்த அரசாங்கத்தினூடாக தீர்வு கிடைக்குமென்று எதிர்பார்க்க வில்லை.

இந்நிலையில் இன்று சர்வதேச சமூகம் எமது பிரச்சினைகளை அறிந்து வைத்திருக்கின்றது. எமது பிரச்சினைகளுக்கும் பாதிப்புக்களுக்கும் தீர்வை அல்லது நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென நாம் கோரி வருகின்றோம்.

ஆகவே தற்போது கிடைத்திருக்கின்ற சர்வதேச சந்தர்ப்பத்தை சரியான முறையில் தெளிவாகப் பயன்படுத்திக் கொண்டு எமது வேலைகளை முன்னெடுக்க வேண்டும். அதற்கமையவே நாமும் செயற்பட்டு வருகின்றோம். இதற்கமைய அடுத்த மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் கூட்டத்தொடரில் அரசாங்கத்தை மூன்றாவது தடவையாகவும் சர்வதேசதம் தோற்கடிக்க காத்திருக்கின்றது.

இந்த விடயத்தில் நாம் ஜனநாயக ரீதியாகவும் இராஜதந்திர முறையிலும் அணுக வேண்டும். ஆனால், இந்த முறை ஜெனீவாக் கூட்டத் தொடரில் பல நெருக்கடிகளும் காத்திருக்கின்றன. எங்களுடைய இழப்புக்கள், அழிவுகள் வெளிக் கொண்டு வரப்பட்டு உண்மைகள் வெளி வருவதற்காக நாமும் உழைக்க வேண்டும்.

இதற்காக ஜெனீவாவில் அரசிற்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கு ஆதரவு திரட்ட வேண்டியுள்ளது. இதற்கமைய நாம் வேலைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதனை இந்திய அரசாங்கம் உள்ளிட்ட பல அரசுகள் ஆதரிக்குமென்ற நம்பிக்கையும் எமக்கிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# அறிவிக்கப்படாத போராட்டம் ஒன்று வடக்கில் இடம்பெற்று வருகின்றது

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜதீபன்





(யாழ்ப்பாணம்)

அறிவிக்கப்படாத போராட்டம் ஒன்று வடக்கில் தற்போதும் இடம்பெற்றுவருகின்றது என தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் , எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தீவகத்திலுள்ள மூன்று சபைகளையும் பெரும்பான்மை பலத்துடன் கைப்பற்றுமெனவும் தெரிவித்துள்ளார்.

தீவகப்பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயத்தை மேற்கொண்ட கூட்டமைப்பின் குழுவினர் அப்பகுதி மக்களுடன் சந்திப்புக்களில் ஈடுபட்டனர். இதன்போது ஊர்கா வற்றுறை, நாரந்தனைப்பகுதியில் காலை 10 மணியளவில் இடம்பெற்ற மக்கள் சந்திப் பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவிததார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு இனத்தை பலவீனமடையச்செய்வதன் ஊடாகவே அந்த இனத்தின் உரிமைகளை நசுக்க முடியும். அந்த வகையில் தமிழினத்திற்கு எதிராக திட்டமிட்ட வகையில் அடக்கு முறைகளை அரசு பிரயோகித்து வருகின்றது. தமிழர்களின் பூர்வீக நிலங்கள் திட்டமிட்ட வகையில் அபகரிக்கப்பட்டு எமது இனத்தின் தனித்துவம் சிதைக்கப்பட்டு உரிமைகளை கேட்க முடியாத நிலையில் வைத்திருக்க பார்க்கின்றது. இதற்கு நாம் ஒருபோதும் அனுமதி வழங்க முடியாது.

எமது தமிழினத்தின் பரம்பல் தற்போது 12 இலட்சமாக யாழ்.மாவட்டத்திலிருந்திருக்க வேண்டும். ஆனால், பல்வேறு காரணங்களால் 5 இலட்சத்திற்கும் குறைவாகவேயுள்ளது. இடப்பெயர்வு யுத்தத்தில் ஏற்பட்ட உயிரிழப்பு, வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் நாட்டுக்கு திரும்ப முடியாத நிலைகாரணமாக சனத்தொகையின் பரம்பல் குறைவடைந்து வருகின்றது.

இவ்வாறு காலத்திற்கு காலம் தமிழினம் திட்டமிட்டு அழிக்கப்பட்டுவருகின்றது. ஒரு இனம் தன்னை தக்க வைக்கவேண்டுமானால் பூர்வீக நிலங்கள் பாதுகாப்படவேண்டும்.

எமது இனத்தவர்களின் கடந்தகாலப் போராட்டமும் நிலத்தை பாதுகாப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது. நிலத்திற்காகவே போராட்டம் இடம்பெற்றது என்பதையாரும் மறுப்பதற்கில்லை.

மேலும் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைத்துள்ளது. தமிழரசு என்று பலரும் வர்ணித்து வரும் வடக்கு மாகாணசபையினை கூட்டமைப்பு எவ்வாறு கைப்பற்றியதோ அதேபோன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தீவகத்திலுள்ள மூன்று சபைகளையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும் என்பதில் எந்தவிதமான மாற்றுக்கருத்தும் இருக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## சகல பிள்ளைகளுக்கும் சமமான கல்வி-ஜனாதிபதி

சரியான கல்வி அறிவை பெற்றுக்கொடுப்பதன் மூலம் சமூகம் தொடர்பில் புரிந்துணர்வுள்ள, நாட்டை நேசிக்கும் தலைமுறை ஒன்றை உருவாக்க முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.புத்தளம் சாஹிரா கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இன, மத பேதமின்றி கல்வியின் பெறுமதியை சகல பெற்றோரும் உணர்ந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். நாட்டில் வாழும் சகல பிள்ளைகளுக்கும் சமமான கல்வி வசதிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார். (அ-2)

## ஜனாதிபதியின் பயணம் குறித்து பதிலளிக்க ஆளும்கட்சி மறுப்பு

(கொழும்பு)

பொதுமக்களின் நிதிகள் தொடர்பான கட்டுப்பாட்டை நாடாளுமன்றம் கொண்டிருக்கிறது. இந் நிலையில் கடந்த வாரம் நாடாளு மன்றத்தில் பொதுமக்கள் வரி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்க ஆளும் கட்சி மறுத்துள்ளது.

இது அரசியல் அமைப்பை மீறும செயல் என்று கொழும்பின் ஆங்கில செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிப்தியின் வெளிநாட்டு பயணங்கள் மற்றும் அதற்கான செலவுகள் குறித்து எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க கேள்வி எழுப்பினார். எனினும் அதற்கு ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் தினேஸ் குணவர்த்தன பதில் வழங்க மறுத்து விட்டார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை என்ற வகையில் இதற்கான பதிலை வழங்க முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.இதன்போது குறுக்கிட்ட எதிர்க்க ட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க பொதுமக் க ளின் வரியிலேயே அரசாங்கத்தின் செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் ஜனாதிபதிக்கான செலவீனங்களுக்கும் நாடாளுமன்றமே அங்கீகாரம் வழங்குகின்றது.

இந்நிலையில் ஏன் ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணங்கள் தொடர்பில் விளக்கம் தரமுடியாது என்று கேள்வி எழுப்பினார்.

இதனை சபாநாயகர் சமல் ராஜபக்சவும் ஏற்றுக்கொண்டார். குறித்த கேள்விக்கு பதிலளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

ஏற்கனவே இதே கேள்வியை ஜே.வி.பி எழுப்பியிருந்த போதும் அரசாங்க தரப்பு பதில் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத காடழிப்பு நடவடிக்கைக்கு வவுனியா வனஇலாகா அதிகாரிகள் துணைபோகின்றனர்

(குருமன்காடு)

வவுனியாவில் இடம்பெறுகின்ற சட்டவிரோத காடழிப்புக்கு வவுனியா வனஇலாகா அதிகாரிகள் துணைபோவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த சில மாதங்களாக ஓமந்தை அரசமுறிப்பில் தனியார் ஒருவரால் 300 ஏக்கருக்கு மேற்பட்ட வன இலாகாவின் கட்டுப்பாட்டில் உள்ள காடு அழிக்கப்பட்டு அதில் உள்ள பெறுமதி மிக்க பாலை, முதிரை போன்ற மரங்கள் வியாபாரத்திற்காக வெட்டப்பட்டு வருகின்றன. அக்காட்டுநிலம் தனக்குரியது என்று கூறுவதற்கேதுவாக நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளமுடியாத சட்ட வலுவற்ற யப்பான் உறுதி என அழைக்கப்படும் ஒரு பொய உறுதியை தயார் செய்து வைத்துக் கொண்டே இக்காடழிப்பு இடம் பெற்று வருகின்றது.

ஆனால், சுற்றாடல் அமைச்சின் 2010/04 சுற்று நிருபத்தின் படி காட்டில் உள்ள பாலை, முதிரை, கருங்காலி போன்ற பெறுமதியான மரங்கள் அழிக்கப்படுவதாக இருந்தால் நிலஅளவைத் திணைக்களம், வனஇலாகா, பிரதேச செயலாளர், சுற்றாடல் அமைச்சு அதிகாரிகள் ஆகியோரிடம் முறையான அனுமதி பெறவேண்டும். அப்படி இருக்கையில் இங்கு அந நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படாமல் வெறுமனே சட்டவலுவற்ற யப்பான் உறுதியை வைத்துக் கொண்டு அனுமதி வழங்குவது ஏற்றுக் கொள்ள முடியாது.

இது தொடர்பாக கடந்த 21ஆம் திகதி மாவட்ட வன இலாகா அலுவலகத்தில் தொடர்பு கொண்டு கேட்ட போது, காடழிக்கும் தனிநபரிடம் யப்பான் உறுதி இருப்பதால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர். இவ்வாறு அவர்களால் எனக்கு வழங்கப்பட்ட பதிலும் திருப்திகரமாக இல்லை. இதனால் இக் காடழிப்புக்கு மாவட்ட வனஇலாகா துணை போகின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இக்காடழிப்பை தடுத்து நிறுத்த உடன்நடவடிக்கை எடுக்குமாறு சுற்றாடல் அமைச்சரையும் தொலை நகல் மூலம் கேட்டிருக்கின்றேன்.

இது தவிர, ஏற்கனவே வன இலாகாவின் உத்தரவு பெற்று நடத்தப்பட்டு வரும் மரக்காலைகளின உரிமையாளர்களை வவுனியா வனஇலாகா உத்தியோகத்தர்கள் இலஞ்சம் கேட்டு பயமுறுத்துவதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.


சில நாட்களுக்கு முன் ஓமந்தையில் ஒருவரிடம் ஐம்பதாயிரம் ரூபாவும் வவுனியா நகரில் ஒருவரிடம் இருபதாயிரம் ரூபாயும் வனஇலாகா உத்தியோகத்தர்கள் இலஞ்சம் பெற்றுள்ளனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் எனக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து தொலைபேசியூடாக வவுனியா மாவட்ட வனஇலாகா உத்தியோகத்தரிடம் வினவியபோது, அவர் எனக்கு அளித்த பதில் திருப்தியாக அமையவில்லை. மக்கள் பிரதிநிதியாகிய என்னுடன் அவர்கள் உரையாடிய போது நடந்து கொண்ட விதம் என்னை அவமதிப்பதாக இருந்தது. மக்கள் பிரதிநிதியாகிய என்னுடனேயே இவ்வாறு நடந்து கொள்ளும் இவர்கள் சாதாரண மக்களுடன் எவ்வாறு பொறுப்புடன் நடந்து கொள்வார்கள் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இவ் விடயம் தொடர்பில் வன இலாகா அதிகாரியால் கடிதமூலம் எனக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது. அது தனிச்சிங்களத்தில் வழங்கப்பட்டுள்ளது. வடமாகாண சபை நிர்வாக எல்லைக்குள் இருக்கும் ஒரு பிரதேசத்தில் உள்ள ஒரு காரியாலயம் அப்பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான என்னுடன் தனிச் சிங்களத்தில் தொடர்பு கொள்ளும் போது பொது மக்களுடனான தொடர்பு எவ்வாறு இருக்கும் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

மும்மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதாக அரசும் அமைச்சர்களும் கூறி வரும் நிலையில் வனஇலாகா அதிகாரிகள் இவ்வாறு நடந்து கொள்வது அரசின் கபடத்தனத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என அவ்வறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது (அ-9-250)

# போக்குவரத்திற்கான பாதை இன்மையால் மக்கள் சிரமம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொன்நகர் கிராம அலுவலர் பிரிவின் கீழுள்ள சில கிராமங்களுக்கு போக்குவரத்துப் பாதை இல்லாமையினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

மேற்படி கிராம சேவையாளர் பிரிவின் கீழ் 70 வீட்டுத்திட்டம், 50 வீட்டுத்திட்டம், 15 வீட்டுத்திட்டம் போன்ற குடியேற்றத்திட்டங்கள் உள்ளன.

இவற்றில் பொன்நகர் தெற்கு மற்றும் 70 வீட்டுத்திட்ட குடியிருப்பாளர்களுக்கு போக்குவரத்துப் பாதையின்மையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப் பகுதி மக்களின் போக்குவரத்து பாதையாகவிருந்த புகையிரத பாதை தற்போது புகையிரத கடவையாக உள்ளது.

இந்நிலையில் புகையிரதக் கடவைகள் கடந்து போக்குவரத்துச் செய்வது அபாயகரமாகவுள்ளது.

இந்நிலையில் இக் குடியிருப்பாளர்கள் போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ள புதிய வீதிகளை ஆறு ஊடறுத்தும் செல்வதனால் போக்குவரத்தை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த குடியிருப்புக்களிலுள்ள மக்கள் போக்குவரத்தைச் செய்வதற்கு பாதைகள் எதுவுமில்லாததனால் பல இடையூறுகளை சந்தித்து வருகின்றனர்.

எனவே, இக்கிராமமக்களுக்கு ஒழுங்கான வீதிகளை அமைத்து சீரான போக்குவரத்திற்கு உரியவர்கள் உதவ வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-9-254)

# தெளிகரை கிராம வீடுகளுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள தெளிகரை கிராமத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட இந்திய வீட்டுத் திட்ட மக்களுக்கு மின்சாரம் இது வரை கிடைக்கவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தெளிகரை கிராமத்திற்கு இந்திய வீட்டுத்திட்டத்தினூடாக 50 வீடுகள் வழங்கப்பட்டு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக மின்னிணைப்புக்களும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மின்னிணைப்புச் செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, எஸ்.டி.எஸ் நிறுவனத்தினால் இக் கிராமத்தில் 35 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன்மின்னிணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஆயினும், ஆறு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளுக்கு மின்சாரத்தை தாமதிக்காமல் வழங்குமாறு கிராம மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-9-84)




# சுயலாப நோக்கோடு செயற்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்

இரணை இலுப்பைக்குளத்து தமிழ் முஸ்லிம் மக்களை அமைதி காக்குமாறு வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம்விடுத்துள்ளஊடகஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வாரம் இரணை இலுப்பைக் குளத்தில் உள்ள எனது கட்ட வுட் மீது கறுப்பு பெயிண்ட் பூசியது மட்டுமல்லாது அதனைமேற்கொண்டது இஸ்லாமிய நபர்கள் தான் என்பதனை தமிழ் மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக மீண்டும் றிசாத் வருவான் அச்சமில்லை எதிர்பாருங்கள் என்று எழுதப்பட்டுள்ள துண்டுப்பிர சுரமும் ஒட்டப்பட்டுள்ளது.

இச் செயற்பாடு குறித்த கிராம மக்கள் மத்தியில் உள்ள ஒற்றுமையினை குழப்பும் முகமாக மேற்கொள்ளப்பட்ட சதி என நான் அறிகின்றேன். அங்குள்ள கிராமங்களில் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும் அப் பகுதி மக்கள் நன்கு அறிவார்.


மேற்படி செயலில் ஈடுபட்டவர்கள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் ஆதரவாளர்களாக இருப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை. சம்பவதினத்திற்குமுன்னைய தினம் ஒரு சில எமது அரசியல்வாதிகள்அங்குசென்றுவந்துள்ள தாகவும் தகவல் கிடைக்கப்பெற்றது.

எனவே, மேற்படி செயலானது அரசியல் இலாபம் கருதியும் எதிர்கால நாடாளுமன்றத் தேர்தலைக் குறிவைத்தும் சுயலாபம் தேடும் நோக்கில் மேற்கொள்ளப்படுவது போன்று தென்படுகின்றது.

இவ்வாறு சந்தேகிப்பதற்கான சில ஆதாரபூர்வமான சாட்சியங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவற்றின் உண்மைத் தன்மையினை சரிவர ஆராய்ந்து குறித்த நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். (அ-9-250)

# விருது வழங்கி கௌரவம்



அகில இலங்கை சமாதான நீதவானாகிய இராமசாமி புவனேந்திரன் அண்மையில் சாம சிறி தேச கீர்த்தி எனும் பட்டம் வழங்கி கூட்டுறவு பிரதி அமைச்சரினால் கௌரவிக்கப்பட் டுள்ளார்.

இவர் புது முறிப்பு கற்பக விநாயகர் ஆலய செயலாளரும் கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவை தலைவராகவும் சத்தியபாபா சமுர்த்தி கிளி நொச்சி மாவட்ட செயலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-9-254)

# இலவச மருத்துவமுகாம்



(குருமன்காடு)

வடமாகாணசபை உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகனும், யாழ். மாவட்ட மருத்துவ அதிகாரிகள சங்கமும் இணைந்து நெடுங் கேணியில் நேற்று முன்தினம் காலையிலிருந்து நண்பகல் வரை இலவச மருத்துவ சேவையை வழங்கினர்.

தண்டுவான் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் நெடுங்கேணி பிரதேசத்துக்குட்பட்ட கரடிப்புலவு, தண்டுவான், பழம்பாசி, இத்திமடு, தட்டையன்மலை, ஒதியமலை, நெடுங்கேணி நகரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்குட்பட்ட பிரதேசங்களில் மக்களின் தேக ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் கருதி, வடமாகாண சபை உறுப்பினர் ஒவ்வொரு வாரமும் இலவச மருத்துவ முகாம்களை பிரதேச ரீதியாக நடத்தி வருகினறார். இது அவரது நான்காவது இலவச மருத்துவ முகாம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-9-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

730

## வீரதீர பராக்கிரமன் யார்?

மன்னர் சுதட்சிணர் ஆட்சிக் காலத்தில் நாட்டில் சுபிட்சம் நிலவியது.

மக்கள் மனநிறைவுடன் வாழ்க்கை நடத்தினர். ஆனால், மன்னருக்கு வாரிசு இல்லாதது ஒரு பெருங்குறையாக இருந்தது.



தனக்குப் பிறகு ராஜ்யத்தை ஆளப்போவது யார் என்று பெருங்கவலையில் மூழ்கிய மன்னர் ஒருநாள் தன் முதன்மந்திரி கங்காதரரை அழைத்து அதைப் பற்றி ஆலோசித்தார்.

"மந்திரியாரே! இந்த ராஜ்யத்தை நான் ஒழுங்காக நிர்வாகம் செய்து வருகிறேன்.

ஆனால், எனக்குப் பிறகு யார் ஆட்சிப் பொறுப்பை ஏற்பார்கள் என்பது எனக்குப் பெரும் கவலையை அளிக்கிறது.

எனக்குப் பிறகு சிம்மாசனத்தில் அமரப்போவது யார் என்பதை இப்போதே நாம் தீர்மானித்தால் நல்லது.

ராணியைக் கலந்து ஆலோசித்தால் அவள் தன்னுடைய உறவினர்களின் பிள்ளைகள் யாரையாவது தத்து எடுத்துக் கொள்ளுமாறு சொல்கிறாள்.

அதில் எனக்கு விருப்பமில்லை. எனக்குப் பிறகு முடிசூட்டிக் கொள்பவன் வீரதீரப் பராக்கிரமனாக இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட வீரனை நாம் எப்படித் தேடுவது?" என்றார்.


அதற்கு மந்திரி, "பிரபு! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

நமது தலைநகரில் உள்ள குருகுலத்தில் வித்யாசாகர் அவர்கள் பல ஷத்திரிய மாணவர்களுக்கு வில்வித்தை, வாட்போர், மல்யுத்தம் ஆகியவற்றையும், ராஜாங்க நிர்வாகத்தையும், போர்த் தந்திரங்களைய்யும் கற்பித்து வருகிறார்.

அவரிடம் சென்றால், நம் ராஜ்யத்தின் எதிர்கால வாரிசை நாம் தேர்ந்தெடுக்கலாம்" என்றார்.

மன்னருக்கு அது சரியான யோசனை என்று தோன்றவே, இருவரும் மறுநாளே குருகுலத்திற்குச் சென்று, வித்யாசாகரை சந்தித்து, தாங்கள் வந்த காரியத்தைப் பற்றிக் கூறினர்.

அதற்கு குரு வித்யாசாகர், "மகாராஜா! நீங்கள் சரியான சமயத்தில்தான் வந்திருக்கிறீர்கள்.



விஜயதசமியையொட்டி, குருகுலத்தில் பல்வேறு போட்டிகள் நடைபெற உள்ளன.

அந்தப் போட்டிகளைப் பார்வை இட்டால், உங்களுக்குத் தேவையான வீரனை நீங்களே தேர்வு செய்து கொள்ள முடியும்" என்றார்.

மறுநாள், போட்டியில் பங்கேற்ற மூன்று பேர் நீண்ட தூரம் பயணம் செல்ல வேண்டும் என குரு உத்தரவிட்டார்.

இதன்படி தங்கள் பயணத்தைத் தொடங்கிய மூன்று பேரும் ஒருமாதப் பயணத்திற்குப்பின் குருகுலத்திற்குத் திரும்பினர்.

அவர்கள் திரும்பி வந்தபோது, குருகுலத்தில் குரு வித்யாசாகருடன், மன்னரும், மந்திரியும் அமர்ந்திருந்தனர்.

அவர்களை வரவேற்ற குரு, மூவரையும் ஒருவர் பின் ஒருவராக தங்கள் பயண அனுபவங்களைக் கூறும்படி சொன்னார்.

முதலில் முன்வந்த வில்வித்தை நிபுணனான ஜெயன் "குருவே! நான் வடக்கு திசையை நோக்கிப் பயணமானேன்.

வழியில் எனக்கு எந்தவிதத் தடங்கலும் ஏற்படவில்லை.

சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் மகிழ்ச்சியுடன் தென்பட்டனர்.

ஆனால், நம் ராஜ்யத்து எல்லையில் உள்ள காட்டுப்பிரதேசத்தில் நான் கண்ட காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது.

அங்கு சில இளைஞர்கள் ரகசியமாக ஆயுதப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தனர்.

மறைந்திருந்து தாக்குவது, அரசாங்க ஆயுதங்களைத் திருடுவது, ரகசிய ஆயுதத் தயாரிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டிருந்த அந்த இளைஞர்கள் பக்கத்து ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள்.

வறுமையில் வாடும் அந்த இளைஞர்களை யாரோ ஒருவன் அடிமைப்படுத்தி அவ்வாறு ஆயுதப் பயிற்சி அளிப்பதைப் பார்த்தேன். (தொடரும்)

---

02.2014

25

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1797 - வில்லியம் டேட் தலைமையிலான 1000-1500 போர் வீரர்களைக் கொண்ட படைகள் தமது பிரித்தானியா மீதான கடைசிப் படையெடுப்பை அடுத்து சரணடைந்தனர்.
- 1836 - சாமுவேல் கோல்ட் சுழல் துப்பாக்கிக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1837 - தோமஸ் டெவன்போர்ட் மின்சாரத்தில் இயங்கும் மோட்டாருக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1921 - ஜோர்ஜியாவின் தலைநகர் திபிலீசி ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் படைகளினால் கைப்பற்றப்பட்டது.
- 1925 - சோவியத் ஒன்றியத்திற்கும் ஜப்பானுக்கும் இடையில் தூதரக உறவு ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் குடியுரிமையைப் பெற்றார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: துருக்கி ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1948 - செக்கோசிலவாக்கியாவின் ஆட்சியை அந்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றியது.
- 1956 - சோவியத் தலைவர் நிக்கிட்டா குருசேவ் ஜோசப் ஸ்டாலினின் ஆட்சிக்கால நிர்வாகத்தைக் கண்டனம் செய்தார்.
- 1980 - சூரினாமில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.
- 1986 - பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பேர்டினனட் மார்க்கோஸ் மக்கள் புரட்சியை அடுத்து ஆட்சியைக் கைவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார். கொரசோன் அக்கீனோ ஜனாதிபதியானார்.
- 1988 - மாதிரி அணுவாயுதத்தைச் சுமந்து சென்ற இந்தியாவின் முதல் ஏவுகணை பிருதிவி ஏவப்பட்டது.
- 2006 - உலகின் மக்கள் தொகை 6.5 பில்லியனைத் தாண்டியது.
- 2007 - ஈசாவின் ரோசெட்டா விண்ணுளவி (Rosetta Space Probe) முதன் முதலாக செவ்வாய்க் கோளை 150 மைல் உயரத்தில் மிக அருகே சுற்றிவந்து அதன் சுழல்வீச்சில் (Mars Fly-by) அப்பால் எறியப்பட்டது.

**பிறப்புகள்**

- 1915 - எஸ். ராஜரத்தினம், சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் (இ. 2006)

**இறப்புகள்**

- 1950 - ஜோர்ஜ் மினோட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1885)
- 1971 - தியோடர் சிவெட்பேர்க், நோபல் பரிசு பெற்ற சுவீடன் வேதியியலாளர் (பி. 1884)
- 1999 - கிளென் சீபோர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (பி. 1912)
- 2004 - நாகிரெட்டி, இந்திய திரைப்படத் தயாரிப்பாளர், பத்திரிகையாளர் (பி. 1912)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...அப்போது சங்கர நாராயண னாகக் காட்சியளித்த இறைவன், புனிதத் தம் பதியரே! என்னுடைய இந்த வடிவம் கண்டு திகைக்க வேண்டாம். அரியும் சிவனும் ஒன்று என்பதை உணர்த்தவே இந்தக் கோலம் காட்டியருளினோம்.


சிவன் வேறு, விஷ்ணு வேறு என்று பிரிவினை பார்ப்பவர்கள் போதிய மனப் பக்குவம் இல்லாத அறியாமை உடையவர்கள். சிவனும் விஷ்ணுவும் ஒன்றே. இதனை உணர்த்தவே இருவரும் கையில் சங்கு ஏந்திய கரத்தினராகக் காட்சி தருகிறோம் (சங்கு+கரன்) சங்கரன்.

சங்கரன் என்றால் மங்களத்தைச் செய்பவன் என்பது பொருள். ஆகவே எல்லா உயிர்களுக்கும் இன்பத்தைச் செய்பவன் யானே! எங்கும் நிறைந்திருப்பவனும் யானே. சிருஷ்டி, திதி, சங்காரம், திரௌபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்களுக்கும் கர்த்தா என்னைத் தவிர வேறொருவருமில்லை.

நானே சங்கரனாகவும், நர்ராயணனாகவும் விளங்குவேன். ஆதலால் என்னை அரிஅர்த்தன் என்று வேதங்கள் எல்லாம் முழங்கும். யார் எந்த வடிவத்தில் வேண்டினாலும் அவர்களுக்கு அந்த வடிவத்திலேயே தோற்றம் தந்து அவர்களுக்கு அருளுவோம். ஆகவே சிவன் வேறு விஷ்ணு வேறு என்ற பேதங்களைக் களைந்து ஒத்த கருத்துடையவர்களாக இருங்கள் என்று உபதேசம் செய்தார்.

இதனைக் கேட்ட ஆனந்தசுந்தரனும், ஆண்டாளும் மனம் தெளிந்தனர். மீண்டும் சங்கரநாராயணனைக் கைகூப்பித் தொழுது, நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினர்.

இறைவா, இதுவரை சங்கரனும் நாராயணனும் ஒருகூறு என்று அறியாமல் ஒருவித பேத மயக்கத்தில் இருந்த எங்களை ஆட்கொண்டு சங்கரநாராயண



இரட்டை லிங்கம்

னாகக் காட்சியளித்து உண்மையை உணர்த்தியது நாங்கள் செய்த பெரும் பாக்கியம். நாங்கள் உண்மையை உணர்ந்துவிட்டோம். நாங்கள் உண்மையை உணர்ந்தது போலவே உலக மக்களும் உண்மையை உணர்ந்து ஒற்றுமையுடன் வாழ்வதற்காக நீரே இரட்டைலிங்க மூர்த்திகளாக இங்கு எழுந்தருளி என்றென்றும் பக்தர்களுக்கு அருள்மழை பொழிய வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர்.

உத்தம பக்தர்களின் வேண்டுகோளுக்கு மனம் இசைந்தார். அவர்களின் விருப்பப்படியே அந்த இடத்திலேயே இரட்டை லிங்கங்களாக எழுந்தருளினார்.

அந்த இரட்டை லிங்கங்களைத் தம் பதியர் இருவரும் ஒற்றுமையாக வழிபாடு செய்து வந்தனர்.

சில காலத்திற்குப் பின்னர், சிவ கணங்கள் வந்து ஆனந்தசுந்தரனையும் ஆண்டாளையும் புஷ்பக விமானத்தில் சிவலோக வாழ்வுக்கு அழைத்துச் சென்றனர்.

இந்தத் தம்பதியருக்குப் பிறகு இந்த இரட்டை லிங்கங்களைச் சதுரகிரியில்

## ஆன்மீகம் 44

தவம்செய்து வந்த சித்தரான இராமதேவர், இதன் அருகிலேயே தனது ஆசிரமத்தை அமைத்து வழிபாடு செய்து வந்தார்.

யாதவர் இருவர் சதுரகிரியில் தங்கள் ஆவினங்களை மேய்த்து, பொழுது சாய்ந்ததும் அவைகளை வடபுறமிருக்கிற காலி இடமாகிய பசுத் தொழுவத்தில் அடைத்து, அப்பசுக்களின் பாலைக் கறந்து வீட்டுக்குக் கொண்டு போகும் போது, வழியில் இருக்கிற சங்கர நாராயண சொரூபமாகிய இரட்டை லிங்கத்திற்கு அருகில் வந்தவுடன் தெய்வாதீனமாகக் கால் இடறி அவர்கள் கரத்திலிருக்கிற பாத்திரத்திலுள்ள பால் அந்த லிங்கத்தின் மீது கொட்டி விடுவது வழக்கமாக இருந்தது.

இப்படிப் பால் தினசரி இந்த இடத்தில் கொட்டிப் போவது கண்டு மிகவும் ஆச்சரியமடைந்த அவர்கள் நாம் எவ்வளவோ பத்திரமாகப் பாலைக்கொண்டு போனாலும் அந்த இரண்டு கல்லும் சேர்ந்திருக்கிற இடத்திற்கு வந்தவுடன் கொட்டிப் போகிறதே! இதற்கு என்ன காரணம்? என்று இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு ஒருநாள் வழக்கம்போல் பாலைக்கறதுகொண்டு வரும் வழியில் அன்றும் அந்த இடத்திற்கு வந்தவுடன் பால் கொட்டிப் போனது.

(தொடரும்)




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



## 56 காலம் ஒருவருக்காக இயங்காது

மனிதன் தன்னை மறக்கும் போது இறைவன் அவனை கவனிக்கிறான். தன் சக்தியை உணராமல் மற்றவருக்கு சவால் விடும் போது, அவன் சிரிக்கிறான். அப்போது மனிதன் அழவேண்டியதாகிறது.

இந்த வாக்கியத்தை நான் கண்கூடாகப் பார்த்தேன். கண்ணதாசன் நடத்திய கவிதா ஓட்டலைப் பலருக்குத் தெரியும். அதை கட்டியவர் ஒரு நீதிபதி.

கண்ணதாசன் பூமாலை படம் எடுக்கும்போது, அந்த வீட்டு காம்பவுண்டுக்குள் படப்பிடிப்பு நடத்த அனுமதி கேட்டு அனுப்பினார்.

"நீதிபதி அவர்கள் நீங்களெல்லாம் படமெடுக்கவா நான் வீடு கட்டி வச்சிருக்கேன். போங்கடா சினிமாக் காரப் பசங்களா" என விரட்டினார்.

பத்து ஆண்டுகளுக்குப் பின் அதே கண்ணதாசன் அதை வாங்கி ஓட்டலாக்கினார். அங்கு எடுக்காத படமில்லை.

இதை எழுதுவதன் நோக்கம்- செம்மல் முதல்வராகப் பதவி ஏற்ற ராஜாஜி ஹாலுக்கு முன் பெயர் பேங்க்வட்டி ஹால். ஆங்கில கவர்னரது ஆலோசனை மண்டபம். அது ராஜாஜி ஹாலான பின் பாக்தாத் திருடன் படத்தின் அரண்மனை சம்பந்தப்பட்ட வெளிப்புறக் காட்சிகளைப் படமாக எடுக்க அனுமதி கோரினோம். அப்போதிருந்த அரசு மறுத்துவிட்டது. அந்த நாளில் செம்மலைத் தம் கட்சிக்கு பகையாக நினைத்தனர். காரணம்- செம்மல் படங்களுக்கு மட்டும் மக்கள் விமர்சனம் கூறவில்லை. [illegible] கூறினர்.

அன்றைய சூழ்நிலையில் யார், படப்பிடிப்புக்காக கூட வரக்கூடாது என்று நினைத்தார்களோ அவரே காவலர் அணிவகுப்புடன் சகல மரியாதைகளுடன் ராஜாஜி ஹால் உள்ளே போவதைப் பார்த்தேன்.

அப்போதும், ஒரு மலரும் நினைவு...

நான் ராயப்பேட்டை வீட்டில் இருந்தபோது 1958 ஆம் ஆண்டு செம்மலையும் எஸ்.எஸ்.ராஜேந்திரனையும் ஏதோ ஒரு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து மைலாப்பூர் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.



டாக்டர் நீலகண்டனுடன் எம்.ஜி.ஆர்.

நான் இருந்த தெருவில் கன்னியப்பன் என்ற காவல் அதிகாரியும் இருந்தார். அவர்தான் மயிலையில் இருந்தார். நான் கேள்விப்பட்டு காவல் நிலையம் போனேன். கன்னியப்பன் செம் [illegible] என்னை அனுமதிக்க [illegible] கெஞ்சினேன்.

"உங்களைப் பற்றி உங்க பக்கத்து வீட்டு கிருஸ்ணபாரதி (சுற்றுலா செய்தி துறை அதிகாரியாக இருந்தவர்) சொல்லியிருக்கிறார். அவருக்காக அனுமதிக்கிறேன். எதுவும் பேசக் கூடாது. போய் பாருங்க" என்றார்.

அடுத்த அறையில் செம்மலும் எஸ்.எஸ்.ஆரும் அமர்ந்திருந்தனர். "பார்க்க விட மாட்டாங்களே, எப்படி வந்தீர்?" என்றதும் நான் நடந்ததைச் சொன்னேன். "பசிக்குது. ஏதாச்சும் டிபன் வேணும்" என்றார் செம்மல்.

கன்னியப்பனிடம் வந்து சென்னேன். "ஆயிரம் பேர் பசியைப் போக்குபவர். பசிக்குது என்கிறார். வாங்கிக் கொடுக்க அனுமதி" கேட்டேன். கொடுத்தார். பிறகு செம்மல் "போர் அடிக்குது. ஏதாவது புத்தகம் கொண்டு வாரும்" என்றார். அதிகாரியிடம் அனுமதி கேட்டேன். "வயித்துப் பசி. இப்ப அறிவுப் பசியா? இதுக்கெல்லாம் இடமில்லை. சரி கொண்டு வாங்க" என்றார். செம்மல் பதவியேற்ற நாளன்று அதே காவல் அதிகாரி உயர்ந்த பதவியில் இருந்தார். செம்மலைப் பணிவோடு அழைத்துச் சென்றார். இதை எழுதுவதன் நோக்கம் காலம் ஒருவருக்காக இயங்குவதில்லை என்பதற்காகவே!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலையே ஒரு நோயா?

தற்கொலை முயற்சிக்கு மனநல மருத்துவரிடம் ஏன் ஆலோசனை பெற வேண்டும்?

பிரச்சினைகளை அவர்களால் என்ன செய்ய முடியும்? ஒருவரது கஷ்டத்தை எப்படி அவர்களால் தீர்க்க முடியும்? என்றெல்லாம் கேள்வி எழுவது இயல்பான ஒன்றுதான்.

எனவே, மனநல மருத்துவர்கள் மற்றும் தற்கொலை தடுப்பு மையங்கள் எப்படி இப்பிரச்சினையை அணுகுகிறன என்று பார்ப்போம்.

'தன்னால் உருவாக்கிய ஒன்றை தானே அழிக்க உரிமை உண்டு. நான் ஒரு வீடு கட்டினேன். ஒரு செடி நட்டேன். ஒரு பானையை உருவாக்கினேன். எனவே அதை அழிக்க எனக்கு எல்லாவிதமான உரிமையும் உண்டு. நட்ட செடி, செடியாக இருக்கும் போதே பிடுங்கி எறிய எனக்கு உரிமை உண்டு. செடி மரமாக வளர்ந்த பின்னர், காடாக மாறிய பின்னரும் அது எனக்கு சொந்தம் தான். இருப் பினும் காட்டை அழிக்கவோ, மர த்தை வெட்டவோ அரசாங்கத்திடம் நான் அனுமதி வாங்க வேண்டும். எனக்கு சொந்தமான மரமாகஇருந்தால்கூட அதைநான்நினைத்த மாத்திரத்தில் வெட்ட முடி யாது.

எனது உயிரை நானா உருவாக்கினேன்? அதை எடுக்கவோ, அழிக்கவோ எப்படி உரிமை கொண்டாட முடியும்? எனவே, ஒருவரது உயிரை எடுக்கவோ அல்லது அழிக்கவோ அந்நபருக்கு உரிமை கிடையாது. இச்சித்தாந்தத்தின் அடிப்படையில் தான் தற்கொலை முயற்சி குற்றமாக கருதப்படுகின்றது. தண்டனைக்குரியதாக எழுதப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் சில கலாசாரம் மற்றும் மத அடிப்படையிலும் தற்கொலை ஏற்புடையதல்ல.

எனவே, ஒரு மனிதனுக்கு தற்கொலை செய்து கொள்ள உரிமையும்கிடையாது. அனுமதியும்கிடையாது.

ஒரு மனிதனின் எந்தவொரு செயலும் அவனுக்கும் ஏனையோருக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும். பயனளிக்காவிட்டாலும் கூட கேடு விளைவிப்பதாக இருக்கக் கூடாது. மேலும் எப்போது ஒருவன் அவனது செயலாலேயே தன்னைத் தானே அழித்துக் கொள்ள முற்படுகிறானோ, அது மனநலத்தின் அறிகுறியாக இருக்க முடியாது. விபரம் தெரியாமல், ஈடுபடுவானேயானால் அதை விபரமற்றவன் செயல் என்று கூறுகிறோம். அறியாமை என்று முடிபு செய்கிறோம். தெரிந்தே செய்யும் போது அவனை மனநலம் குன்றியவன், மனநலமற்றவன் என்று கூறலாம். மேலும் நன்றாக இருந்து இப்படி செய்தவர்களை மனநல பாதிப்புக்குள்ளானவர்கள் அல்லது மனநோய்க்கு ஆளானவர்கள் என்று தெளிவாகக் கூறலாம். இந்த அடிப்படையில்தான் இவர்களை மனநல மருத்துவர் அல்லது ஆலோசகர்களிடம் அபிப்பிராயத்திற்காக அனுப்புகிறார்கள். அதாவது மனநலம் உள்ளவர்களால் தற்கொலையிலோ அல்லது தற்கொலை முயற்சியிலோ ஈடுபட



முடியாது, தேவையும் இருக்காது.

ஒருவர் எத்தகைய மனநல பாதிப்புக்கு அல்லது நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று கணக்கிட்டு அதற்கேற்ற வகையில் சிகிச்சையளிக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் இது வரை உளவியல் ரீதியாகத்தான் தற்கொலையை சமாளிப்பது எப்படி என்று பார்த்தோம். தற்கொலை எண்ணம் தோன்றியவுடன் அந்நபர் என்ன செய்ய வேண்டும் என்று கூறினோம். ஒருவர் அவரது மனதில் தற்கொலை எண்ணத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரிந்தால் தெரியவரும் நபர் என்ன செய்ய வேண்டும்? அவருடைய பொறுப்புக்கள் மற்றும் கடமை கள் என்னவென்று பார்த்தோம். ஓரளவிற்கு மக்களுக்கு இந்நடவடிக்கைகள் புரியும்.

தற்கொலை எண்ணத்திற்கு மருத்துவர்கள் என்ன செய்ய முடியும்? மருத்துவ ரீதியாக, உடலியல் ரீதியாக எப்படி அணுகுவது? அதன் அடிப்படை என்ன? என்று மக்கள் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

மனம் என்றால் என்ன? அதன் உட் கூறுகள் என்ன? என்பதை முதலில் தெரிந்து கொள்வது அவசியமாகும். உணர்வு, எண்ணம் மற்றும் அறிவுத்திறன் ஆகியவையின் ஒட்டு மொத்தக் கலவைதான் மனமாகும். மனம் உடலில் தான் இருக்கிறது. உடலை பாதிக்கும் எதுவும் மனதை பாதிக்கும். மனதை பாதிக்கும் அனைத்தும் உடலையும் பாதிக்கும். மனதும் உடலின் ஒரு அங்கம்தான், பகுதி தான். எப்போது ஒரு அங்கம் உடலில் இருப்பதாகவும் உடலில் இருந்து செயற்படுவதாகவும் நம்புகிறோமோ, அப்போதே அவ்வங்கம் உடலியல் இலக்கணங்களுக்குட்பட்டதாகும். எனவே மனமும் உடலியல் சார்ந்த விடயம் தான்.

உணர்வு என்பது உடலியல் சார்ந்தது என்பதை மேலோட்டமாக பார்க்கும் போது ஏற்க முடியாது. உணர்வை மனதாலும் உணருகிறோம். அதே சமயம் அவ்வுணர்வின் தன்மைக்கேற்ப உடலிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மனதில் உணர்வுகளுக்கு ஏற்ப உடலிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அப்படி ஏற்பாடாவிடில் மனதில் ஏற்படும் உணர்வுகள் முழுமையடையாது. எது முதன் மையாக வந்தது என்பதைப் பொறுத்து உடலியல் காரணங் கள் அல்லது உளவியல் கார ணங்கள் என்று கூறுகிறோம். உட லியல் மாற்றங்களும் உடலின் செயற்பாடுகளும் தான் மனதின் நிலையை உறுதி செய்கின்றன.

உடல் மட்டும் இல்லையென்றால் உள்ளத்திற்கு சாத்தியமே இல்லை. உள்ளமில்லாமல் கூட உடல் இருக்க முடியும். ஆனால் உடல் இல்லாமல் உள்ளமிருக்க சாத்தியமே இல்லை.

போதையை ஏற்படுத்தக்கூடிய ஒரு பொருளை உட்கொள்கிறோம். அல்லது உடலில் செலுத்துகிறோம். அது திடப் பொருளாகவோ அல்லது வாயுப் பொருளாகவோ இருக்கலாம். ஐம்புலன்கள் அல்லது எந்த வழியாகவும் உடலுக்குள் செலுத்தலாம். அதன் விளைவாக மாறான உணர்வுகள் உடலில் ஏற்படும் வாய்ப்பு உண்டு. உடலும் அந்த உணர்வுகளை வெளிப் படுத்தி விடும். அப்பொருளின் தன்

> **தற்கொலை, தற் கொலை முயற்சி , தற்கொலைக்கான உந்துதல் மற்றும் தற்கொலைக்கான எண்ணங்கள் போன்றவை மனச்சோர்வு மனநோயின் அறிகுறி என்று முன்பு நம்பப்பட்டது. ஆனால், இப்போது...?**

மைக்கேற்ப எண்ண ஓட்டம் மாறப்படுகிறது. கருத்துக்கள் பலமடைகின்றன. சிலசமயம் கருத்துக்கள் பல வீனமும் அடைகின்றன. சிந்தனைகள் உருவாகின்றன. அல்லது வீணாகின்றன. பார்வையில் மாற்றம் தெரிகிறது. கண்ணோட்டம் விரிவடைகிறது. மாறுபடுகிறது. சுருங்கவும் செய்கிறது. காரண காரியங்கள் இடம்மாறுகின்றன. புதிதாக ஏதாவது புரிகின்றது. ஏற்கனவே புரிந்தது தெரியாது போய் விடுகிறது. புத்திக் கூர்மையாகிறது. தடுமாறுகிறது. மழுங்கவும் செய்கிறது. இது அனைவரும் அறிந்த ஒன்று. நாம் அன்றாடம் அனுபவிக்கும் விடயங்கள் , மனம் சார்ந்த சமாச்சாரம். ஒரு பொருள் அல்லது இரசாயனம் உடலுக்குள் சென்றவுடன் மனதில் மாற்றம் ஏற்படுகிறது. உடலில் ஏற்படும் எந்தவொரு மாற்றத்திற்கும் காரணம் இரசாயனம் தான். எனவே மனதின் மாற்றங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் இரசாயனம்தான் அடிப்படைக்காரணம் என்பது நிதர்சமான உண்மை யாகும்.

எப்போது உடலியலில் ஒரு மாற்றம் ஏற்படுகிறதோ, அம்மாற்றத்திற்கு மாற்று மற்றொரு இராசயனம் என்பது தான் அறிவியலின் அடிப்படையாகும். இதன் அடிப்படையில் மனதின் செயற்பாடுகள் செயற்படும் மூளையில் இடம்பெற்றிருப்பதாக நம்பலாம். மூளையின் சில பகுதிகளைத் தூண்டும் பொழுது அனைத்து உணர்வுகளையும் உணரமுடிகிறது என்பது அறிவியல் கண்ட உண்மை. இவ்வறிவியலின் அடிப்படையில் விரக்தி, சோகம், அவமானம், ஆற்றாமை, இயலாமை, தற்கொலை எண்ணம் ஆகிய அனைத்திற்கும் மூளையின் செயற்பாடுகள்தான் காரணம் என்று உறுதியாகக் கூறலாம். மூளையின் அத்தகைய செயற்பாடுகள் தெரிந்த மற்றும் தெரியாத அக மற்றும் புறக் காரணங்களால் ஏற்படலாம். எவ்வித காரணமில்லாமலும் மாறலாம். அத்தகைய மாற்றமான செயற்பாடுகளுக்கேற்ப எண்ணம், உணர்வு மற்றும் அறிவுத்திறன் மாற வாய்ப்புண்டு.




இத்தகைய மாற்றங்களால் கூட தற்கொலை எண்ணங்களும் முயற்சிகளும் உந்துதல்களும் ஏற்பட வாய்ப்புண்டு. அதன்பின்னர் அவ்வுணர்வுகளையும் எண்ணங்களையும் செயற்படுத்தவேண்டியது அத்தியாவசியமாகிறது. ஆகவே மூளையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஏற்படும் மாற்றம், இத்தகைய எண்ணம் மற்றும் தூண்டுதலுக்கு காரணமாக அமைகிறது. அப்படியிருப்பின் ஏனைய அல்லது பிறிதொரு இரசாயனம்மூலம் அம்மாற்றத்தை சரிசெய்யலாம். இது தான் மருத்துவத்துறையின் அடிப்படை சிகிச்சையாகும். இதன் அடிப்படையில் தான் மருத்துவம் செயற்படுகிறது. தற்கொலை எண்ணத்தை சரிசெய்ய மட்டுமென சில மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இன் னும் பல வேதிப்பொருட்கள் பரிசோதனை நிலையில் இருந்து வருகின்றன.

தற்கொலை, தற்கொலை முயற்சி, தற்கொலைக்கான உந்துதல் மற்றும் தற்கொலைக்கான எண்ணங்கள் போன்றவை மனச்சோர்வு, மனநோயின் அறிகுறி என்று முன்பு நம்பப்பட்டது.

ஆனால், தற்போது தற்கொலை, தற்கொலை எண்ணங்கள், முயற்சிகள், நிகழ்வுகள் போன்றவை பல வகைப்பட்ட மனநோய்களிலும் நிகழ்கிறது என்பது கண்டறியப்பட்ட உண்மையாகும். இதையெல்லாம் வைத்துப்பார்க்கும்போது எத்தகைய வரையறுக்கப்பட்ட மனநோய்களிலும் தற்கொலை நிகழ்கிறது. எத்தகைய மனநோயும் இல்லாத நிலையிலும் தற்கொலை நிகழ்கிறது. எனவே, மனநல பாதிப்பு என்பதை விட தற்கொலைக்கு வேறு உடலியல் ஆதாரமும் காரணமும் இருக்கலாம் என்ற அடிப்படையில் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

எந்தவொரு உடலியல் மாற்றத்திற்கும் செயற்பாட்டிற்கும் அடிப்படை ஆதாரம் மரபணுக்களாகும். உயிர்மம் என்றும் கூறலாம். மேலும் தற்கொலைகள் குடும்பங்களில் அதிகமாக நிகழ்கின்றன. இரத்த சொந்தங்களில் அதிகமாக காணப்படுகின்றது. பாரம்பரியமாகவும் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட உயிர்மம் அல்லது மரபணுதான் தற்கொலைக்குக் காரணம் என்ற கண்ணோட்டத்தில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. சமீப காலமாக ஒரு சில குறிப்பிட்ட மரபணுக்கள்தான் தற்கொலைக்குக் காரணம் என்று இனம்கண்டுவிட்டதாக கூறப்படுகிறது. இறுதியாக உறுதி செய்யவும் வாய்ப்புக்கள் அதிகம் தான். அப்படியிருப்பின் வருங்காலத்தில் மரபணுவின் தோற்றத்தை வைத்து இருப்பை வைத்து ஒரு குறிப்பிட்ட நபர் தற்கொலை செய்து கொள்ள எவ்வளவு சாத்தியம் அல்லது வாய்ப்பு என்று கணிக்கமுடியும் என்று நம்பப்படுகிறது. இது சாத்தியமானால் தற்கொலையும் ஒருநோய். அதுவும் மரபுவழி சார்ந்தநோய் என்று அறிவிக்கப்பட்டாலும் ஆச்ச ரியப்படுவதற்கில்லை.

# அமெரிக்கப் படையினரின் குற்றங்களை அமெரிக்கா கருத்தில் எடுக்கவில்லை

## ஆங்கில இணையம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைக்கு அல்லது ஏனைய நாடுகளுக்கு எதிராக யோசனைகளை முன்வைப்பதற்கு அமெரிக்காவுக்கு அதிகாரம் இல்லை என்று இலங்கையின் ஆங்கில இணையத்தளம் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கையில் போருக்கு பின்னர் உரிய முன்னேற்றங்கள் நல்லிணக்கம் ஏற்படவில்லை என்றுக் கூறி அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் ஜெனீவாவில் பிரேரணை ஒன்றை முன்வைக்கவுள்ளது.

எனினும் அமெரிக்கா இந்த நான்கு வருடங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை கருத்திற்கொள்ளவில்லை.

அதேநேரம் ஏனைய நாடுகளில் போரின் போதும் பின்னரும் அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட குற்றங்களை அமெரிக்கா திரும்பிப் பார்க்கவில்லை என்று இணையத் தளம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமெரிக்கா, வியட்நாம் போரின் போது எவ்வாறு நடந்துகொண்டது.

இந்தப் போரின் போது சுமார் 4 இலட்சம் சிறுவர்கள் பிறந்த போது போரின் தாக்கங்களுடனேயே பிறந்தனர்.

சிரிய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு அமெரிக்கா நேரடியாக உதவிகளை எதிர்த் தரப்பினருக்கு வழங்கி வருகிறது.

ஈராக்கில் அமெரிக்கா பாரிய அத்துமீறல்களை நடத்தியது.

அங்கு 1990 ஆம் ஆண்டின் முதல் நான்கு வருட பொருளாதார தடையின் போது 5 இலட்சம் சிறுவர் கள் பலியாகினர்.

2005 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 22 ஆயிரம் சிறுவர்கள் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் 2003 ஆம் ஆண்டு அமெரிக்க முற்றுகையின் போது 210· நீதிபதிகளும் சட்டத்தரணிகளும் கொல்லப்பட்டனர். பெண்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டனர்.

இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெறுவதாக கூறும் அமெரிக்கா பல நாடுகளில் சுமார் 27 ஆயிரம் பேரை சட்டவிரோதமாக இரகசிய சிறைகளில் தடுத்து வைத்திருக்கிறது.

இந் நிலையில் அமெரிக்கா எவ்வாறு இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் மனிதவுரிமைகள் மீறப்படுகின்றன என்று கூறி அதற்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கமுடியும் என்று இலங்கையின் இணையத்தளம் கேள்வி எழுப்பியுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின் கோரிக்கை இலங்கையால் நிராகரிப்பு

இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அமெரிக்காவுடன் இணைந்து செயற்படுமாறு இந்தியா, இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித வுரிமைப் பேரவை மாநாட்டில் நிறைவேற்றப்பட வுள்ள தீர்மானம் தொடர்பில் இவ்வாறான கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட முடியாது என இலங்கை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் தீர்மானத்தை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மேற்குலக நாடுகளின் அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படத் திட்டமிடப்பட்டுள்ளது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் 74 அம்ச அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் பதிலளித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# தமிழக முதல்வர் போன்றே வடக்கு முதல்வரும் செயற்படுகின்றார்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

இந்தியாவில் ஜெயலலிதாவைப் போலவே இலங்கையில் விக்னேஸ்வரன் செயற்படுகின்றார். அரசாங்கத்தை எதிர்த்து செயற்படுவதே இருவரினதும் கொள்கையென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

மேலும் குற்றவாளிகளை நியாயப்படுத்துவதில் விக்னேஸ்வரனும் ஜெயலலிதாவும் சரிநிகரானவர்கள். இதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவிக்கையில்,

வட மாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கொள்கைகள் அனைத்துமே இந்திய தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதாவின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டதாகவேயுள்ளன. தமிழ் மக்களின் வாக்குகளை கொள்ளையடித்து தம்மை பலப்படுத்தும் தந்திரம் இருவருக்குமே நன்றாகத் தெரிந்துள்ளது.

வடமாகாண சபைத் தேர்தல் காலத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் விடுதலைப்புலி கைதிகளை விடுவிக்கக் கோரி தமிழர் மனதை மாற்றி வாக்குகளை பெற்றார். அதே சூத்திரத்தினை தற்போது ஜெயலலிதாவும் கையாண்டுள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள குற்றவாளிகளை முதல்வர் ஜெயலலிதா விடுவிக்கக் கோரியுள்ளமையும் அவர்களுக்காக குரல் கொடுத்திருக்கின்றமையும் முழுவதுமே தேர்தலை மையமாக வைத்து நடத்திய நாடகமே.

இன்று மத்திய அரசாங்கத்திற்கு கட்டுப்படாத வகையிலேயே விக்னேஸ்வரனினதும் ஜெயலலிதாவினதும் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

வடக்கையும் தமிழகத்தையும ஒன்றாக்கி தனி ஆட்சியை நடத்தும் செயற்பாட்டையே இவர்கள் மேற்கொள்கின்றனர். இவர்களின் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் இடமளிக்குமாயின் எதிர்காலத்தில் முழு இலங்கையையும் தாரை வார்க்கும் நிலைமை ஏற்படும்.

மேலும் இன்று வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் குற்றவாளிகளை நிரபராதிகளாக்கி மன்னிக்க முடியாத குற்றத்தையும் மறக்க வைக்கும் செயற்பாட்டையே செய்து வருகின்றனர்.

கொலைக் குற்றவாளிகளையும் தீவிரவாதிகளையும் நியாயப்படுத்தி அவர்களை தியாகிகளாக்கும் செயற்பாட்டிற்கு அனைவரும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

ராஜீவ் காந்தி என்பவர் ஓர் நாட்டின் பிரதமர். அவரை கொலை செய்ய முயற்சிப்பது தேசத்துரோக செயற்பாடாகும். ஆயினும் அவர்கள் செய்த குற்றத்தை மறைக்கின்றனர்.

சர்வதேச அளவில் இவர்கள் இருவரையும் தண்டித்து நீதியை நிலைநாட்ட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## பேபெல் சேவை விரைவில் அறிமுகம்

இணையத்தளம் வழியாக பணத்தை பரிமாற்றம் செய்யும் உலக புகழ்பெற்ற பேபெல் (Pay Pal) சேவையை ஆரம்பிக்க இலங்கையில் உள்ள வங்கிகளுக்கு விரைவில் அனுமதி வழங்கப்படும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் வெளிநாடுகளில் இருந்து அனுப்பி வைக்கப்படும் பணத்தை பெறுவதற்காக இலங்கையும பங்காளியாகும்எனவும்அவர்கூறினார்.

தற்பொழுது இந்த பண பரிமாற்றம் மூலம் இலங்கையில் இருந்து மாத்திரம் பணத்தை அனுப்பி வைக்க முடியும்.


குறைந்த செலவில் வெளிநாட்டில் இருந்து பணத்தை அனுப்பி வைக்க இந்த பேபெல் முறை சிறந்தது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ-2)

## அருள் ஒளி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தை மாத வெளியீடான அருள் ஒளி நூல் வெளிவந்துள்ளது.

இந்நூல் பல அம்சங்களைத் தாங்கி வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)



யாழ்ப்பாணம் நீதி நிர்வாக வலயத்திற்கான சமாதான நீதவானாக கெருடாவில் கிழக்கைச் சேர்ந்த செல்வராஜ் தினேஸ்குமார், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டபோது...

# தேர்தலிலிருந்து விலகுவேன்; சரத் பொன்சேகா எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தலிலிருந்து வாபஸ் பெற்றுக்கொள்ளப் போவதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மேல்,தென்மாகாண சபைத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி போட்டியிடவுள்ளது.

இதற்கான பிரசாரப் பணிகளை ஜனநாயகக் கட்சி வேட்பாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

எனினும், தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் சில தரப்பினர் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.



தேர்தல் பிரசாரப் பணிகளின் போது எதிர்நோக்கி வரும் அழுத்தங்கள், இடையூறுகள் தொடர்பில் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மற்றும் பொலிஸ் ஆணையாளர் என்.கே. இலங்கக்கோன் ஆகியோரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காது தொடர்ச்சியாக தேர்தல் பிரசாரப் பணிகளுக்கு தடை ஏற்படுத்தப்பட்டால் தேர்தலிலிருந்து விலகிக் கொள்வதனைத் தவிர வேறு வழியில்லை என குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதமேந்திய ஆளும் கட்சியின் குண்டர்கள் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபடுவதற்கு தடைகளை ஏற்படுத்தி வருவதாக கட்சியின் பிரதித் தலைவர் ஜயந்த கட்டகொட தெரிவித்துள்ளார். (அ-2)

## ஆயுள் தண்டனையாக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட சுமார் 627 கைதிகள் இலங்கையிலுள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனிதவுரிமை ஆணையாளர் கலாநிதி பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்

அவர்களில் சிலர் வயோதிப நிலைமையில் இருப்பதுடன் அவர்கள் குறிப்பிட்ட காலம் வரை சிறையில் தண்டனை அனுபவித்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மரண தண்டனையை நிறைவேற்றுவது மனிதவுரிமைகளுக்கு எதிரானது என்பதால், மனிதாபிமானம் கருதி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (அ-2)

## நிர்வாகிகள் தெரிவு

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலைய மற்றும் ஸ்ரீ வாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகம் என்பவற்றின் பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும் நடைபெற்றுள்ளன.

இதில் சனசமூக நிலையம் மற்றும் கல்வி வளர்ச்சி கழகம் என்பவற்றின் தலைவராக செ.சுதர்சன், செயலாளராக மு.கிரிதரன், பொருளாளராக பூ.பிரகாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கல்வி வளர்ச்சிக்கழக செயலாளராக கு.வஜிந்தன், பொருளாளராக அ.சாள்ஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

உபதலைவராக க.லவேந்தன், உப செயலாளராக ஜெ.சுபாஸ்கரன் ஆகியோர் தெரிவாகினர். மேலும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

# பிரேரணையை நீர்த்துப்போக செய்ய அவுஸ்திரேலியா கடும் முயற்சி

## பிரிட்டன் இராஜதந்திரிகள் கவலை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான அமெரிக்க பிரேரணையை நீர்த்துப் போகச் செய்வதற்கான முயற்சிகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக இராஜதந்திரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்து இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சர்வதேச விசாரணையை வலியுறுத்திய பிரேரணை ஒன்றை தயாரித்து வருகிறது.

ஆனால் இந்த பிரேரணையை வலுவிழக்க செய்வதற்கான தீவிர முயற்சிகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக, குறித்த பிரேரணையை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இராஜதந்திரிகள் தரப்பு தெரிவித்துள்ளது.

“பெயார்பெக்ஸ்“ என்ற இணையத்தளம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக கடந்த வருடம் அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணைக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆதரவாக வாக்களித்திருந்தது.

ஆனால் இந்த வருடம் அவுஸ்திரேலியாவின் பிரதமராக டொனி எபட் தெரிவானதைத் தொடர்ந்து, அவர் இலங்கை அரசாங்கத்துடன் நெருங்கிய உறவை பேணி வருகிறார்.

அவுஸ்திரேலியாவுக்கான அகதிகளின் வருகையை முழுமையாக கட்டுப்படுத்தும் நோக்கில் அவர் இலங்கையுடன் இந்த உறவை பேணி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அவர் இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை நீர்த்துப்போகச் செய்யும் முயற்சிகளை மேற்கொள்கின்றமை தொடர்பில் அமெரிக்க மற்றும் பிரித்தானிய இராஜதந்திரிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ-2)

## தானியங்கி இயந்திரம் பொலிஸாரால் அறிமுகம்


குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர்களை அடையாளம் காண்பதற்காக தானியங்கி கைவிரல் அடையாள இயந்திரம் அறிமுகப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தானியங்கி கைவிரல் அடையாள முறைமை இவ் வாரத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கைவிரல் அடையாளங்களை பெற இதுவரை 14 நாட்கள் தேவைப்பட்டது. புதிய முறை மூலமாக 3 விநாடிகளில் கைவிரல் அடையாளங்களை பெறமுடியும் என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது அமெரிக்காவின் அடுத்த குறி?



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, தீர்மானத்தைக் கொண்டுவரும் முயற்சிகளில் அமெரிக்காவும், அதனை எப்படியாவது பலவீனப்படுத்திவிட வேண்டும் அல்லது தோற்கடித்துவிட வேண்டும் என்ற முயற்சியில் இலங்கையும் தீவிரம் காட்டி வருகின்றன.

ஜெனிவாவில், இலங்கைக்கு எதிராக அடுத்தடுத்து தீர்மானங்களைக் கொண்டு வந்து நெருக்கடி கொடுக்க, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதற்கு ஒரே காரணம், நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதே என்று, அரசாங்கம் பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளது.

இது நல்லிணக்கம், நிலையான அமைதிக்கான ஜெனிவா நடவடிக்கைகளைத் திசைதிருப்பி விடுகின்ற முயற்சியாகவே பார்க்கப்படுகிறது. ஒருபக்கத்தில், ஆட்சிமாற்றத்துக்கான முயற்சியாக சந்தேகம் கொள்வதற்குச் சில அறிகுறிகள் இருப்பதை மறுக்க முடியாது. ஆனால், இந்தத் தீர்மானங்களின் அடிப்படை நோக்கம் அதுவாக இருக்க முடியாது. ஏனென்றால், பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்தியே ஜெனிவா நகர்வுகள் இடம்பெறுகின்றன. அந்தக் கட்டுப்பாடு நிறைவேற்றப்படாத நிலையில்தான், துணைக் காரணிகளைக் கொண்டு இந்த நகர்வுகள் வலுச்சேர்க்கப்படுகின்றன.

முன்னர், தனியே மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தல், கடந்த கால மீறல்களுக்குப் பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே மேற்குலக நாடுகளின் அழுத்தங்கள் இருந்தன. ஆனால், இப்போது அந்த இலக்கு மேலும் விரிவடைந்துள்ளது. மதசிறுபான்மையினர், ஊடகங்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மீதான தாக்குதல்கள் விவகாரம், சட்டத்தின் ஆட்சி சீர்கேடு, ஜனநாயகமின்மை, ஊழல் உள்ளிட்ட விவகாரங்களும், மேற்குலகினது குற்றச்சாட்டுக்களில் இடம்பெற்றுள்ளன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இத்தகைய விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமல், இப்போது இதனை முன்னிலைப்படுத்துவது கேள்விக்குரிய விவகாரமாகவே உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த விடயங்களில் இலங்கையின் நிலைமை மோசமடைந்துள்ளது மட்டும்தான் இதற்குக் காரணம் எனச் சொல்ல முடியாது. தமது தீர்மானத்துக்கு மேலும் வலுச்சேர்க்க வேண்டிய சூழலில், இத்தகைய குற்றச்சாட்டுக்களையும் சேர்க்க வேண்டிய அவசியம் மேற்கு நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும், இது அரசாங்கம் கூறுவது போன்று ஆட்சி மாற்றத்தை இலக்கு வைத்த நகர்வா என்ற குழப்பம் இருக்கவே செய்கிறது. குறிப்பாக, ஊழல் விவகாரத்தை அமெரிக்கா உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் தனது குற்றச்சாட்டுக்களில் ஒன்றாக முன்வைத்திருந்ததை, ஆட்சி மாற்றத்துக்கான அறிகுறியாகவே சிலரால் பார்க்கப்படுகிறது.

போரின் மூலமும், அதன்பின்னர் போரில் பெற்ற வெற்றியின் மூலமும், அரசாங்கத்தினால் கட்டியெழுப்பப்பட்டுள்ள சிங்களத் தேசியவாத ஆதரவுத் தளத்தை உடைப்பதற்கு உகந்த ஆயுதமாக ஊழலே இருக்கும் என்று அமெரிக்கா கணித்துள்ளதாக சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பொதுவாகவே, பொருளாதார நெருக்கடிகள் எங்கெல்லாம் தலையெடுக்கிறதோ, மக்கள் மீது அந்தப் பாரம் சுமத்தப்படுகிறதோ, அங்கெல்லாம் ஆட்சி மாற்றத்துக்கான விதை முளைகொள்வது வழக்கம். அரபுலகில் பல தசாப்தங்களாக ஆட்சி நடத்தியவர்களைத் துரத்தியடியப்பதற்கு, ஊழல், மோசடி, தலைவர்களின் ஆடம்பர வாழ்க்கை, மக்கள் மீது திணிக்கப்பட்ட பொருளாதார அழுத்தங்கள்தான் முக்கிய காரணமாக அமைந்தன.

ஏன் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகப் போட்டியாக கட்டியெழுப்பப்பட்ட, சோவியத் யூனியன் தலைமையிலான வோர்சோ என்ற கிழக்காசிய, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிச சாம்ராஜ்யம் சரிந்து போனதற்கும், பொருளாதார சுமைகள்தான் காரணம். பொருளாதார சீர்திருத்தம் ஜனநாயக எழுச்சி ஏற்பட்டபோது, அதற்குத் தாக்குப்பிடிக்க முடியாமல், பல கம்யூனிச நாடுகள் உடைந்து போயின, அதை எதிர்த்து நின்ற தலைவர்கள் உயிர்துறக்கவும் நேரிட்டது. அதனால்தான், இலங்கை விவகாரத்திலும் ஊழல், சட்டத்தின் ஆட்சி சீர்கேடு, ஜனநாயகமின்மை போன்றவற்றை மேற்குலகம் முன்னிலைப்படுத்துவதாக, ஒரு கருத்து உள்ளது. அரசாங்கமும் கூட இதே கோணத்தில்தான் கருத்துக்களை வெளியிடுகிறது.

தற்போதைய அரசாங்கத்தை மேற்குலகின் தாளத்துக்கு ஏற்ப ஆடவைக்க முடியாதென்பதால், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மேற்கு நாடுகள் முனைவதாக அரசாங்கம் வெளிப்படையாகவே கூறி வருகிறது. இந்த விடயத்தில், அமெரிக்கா மீது அரசாங்கம் நேரடியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தவும் தவறவில்லை. இருந்தாலும், அமெரிக்காவோ அல்லது அடுத்த ஜெனிவா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ள பிரித்தானியாவோ, ஆட்சி மாற்றம்தான் தமது இலக்கு என்று ஒருபோதும் கூறவில்லை.

அண்மையில் ஆங்கில வார இதழ் ஒன்று, பிரித்தானியத் தூதுவர் ஜோன் ரன்கின்னிடம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த மேற்குலகம் முனைகிறதா என்று கேள்வி எழுப்பியதற்கு, அவர் அதுபற்றி இப்போது யாரும் பேசவில்லையே என்று கூறியிருந்தார்.

அரசாங்கங்கள் அல்லது தனிநபர்கள், எங்கே தவறுகளைச் செய்தார்கள், சட்டத்தை மீறினார்கள் என்று கண்டறிந்து அவர்கள் அந்த நடவடிக்கைகளுக்காக பொறுப்புக்கூற வேண்டும். அதுதான் இந்த விசாரணையின் நோக்கம். யாரும் ஆட்சிமாற்றம் குறித்துப் பேசவில்லை. அது இந்த நகர்வின் நோக்கமல்ல என்று அவர் தெளிவாகக் கூறியுள்ளார். ஆட்சி மாற்றத்துக்கான முயற்சி பற்றிய கருத்துக்கள் வலுவடைவதை அமெரிக்காவோ, பிரித்தானியாவோ, விரும்பவில்லை. ஏனென்றால், அது சிங்கள தேசியவாதத்தைத் தட்டியெழுப்பிவிடும் என்று அதன் நிழலில் குளிர் காய அரசாங்கம் முற்படும் என்றும் மேற்குலகம் சரியாகவே கணித்துவைத்துள்ளது. அதேவேளை இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்ற கருத்தையும் அரசாங்கமே ஊக்குவித்து வருகிறது.

எத்தகைய தடைகளை விதித்தாலும் அரசாங்கம் அஞ்சாது என்று அமைச்சர் நிமால் ஸ்ரீபாலடி சில்வா கடந்த வாரம் கூறியிருந்தார். போருக்குப்பின்னர் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சிபெற்றுள்ளதாகவும் அத்தகைய தடைகளை எதிர்கொள்ள தயங்கமாட்டோம் என்றும் அவர் சூளுரைத்திருந்தார். ஆனால், இம்மாதத் தொடக்கத்தில் கொழும்பு வந்திருந்த அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் பொருளாதாரத் தடைகளை விதிப்பது தொடர்பாக எந்த முயற்சிகளும் இல்லை என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருந்தார். உண்மையில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்து இலங்கைக்கு எதிரான தடைகளை விதித்தால் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இலங்கைக்குக் கிடையாது. ஆனாலும் அரசாங்கம் இதனை முன்னிலைப்படுத்துகிறது என்றால், அதற்குக்காரணம் சிங்கள தேசியவாதத்தைத் தட்டியெழுப்புவதே. இதனை வாக்குகளாக்கி அந்த வாக்குகளைதமக்கானமக்கள்ஆணையாக பலமாக காண்பித்து சர்வதேச பிரச்சாரத்தை முன்னெடுத்து ஒரு கவசத்தை உருவாக்குவதே அரசாங்கத்தின் திட்டம். அதேவேளை மேற்குலகினது இந்த அழுத்தங்களின் நோக்கம் இலங்கையை ஏதேனும் வழிகளில் தண்டிப்பது அல்ல என்பதும் உறுதி.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் தொடர்பான விவகாரங்களை வைத்து தமது பேச்சைக்கேட்கக் கூடியவகையில் அரசாங்கத்தை வழிக்குக்கொண்டுவருவதே மேற்குலக அழுத்தங்களின் நோக்கமாகத் தெரிகிறது.

இந்தியப் பெருங்கடலில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள இலங்கை தொடர்ந்து சீனாவின் பக்கம் சார்ந்து செல்வதை மேற்குலகம் விரும்பவில்லை. மேற்குலக நாடுகளுக்கு எதிராக ஒரு கூட்டணியை அமைக்க முனைவதையும் விரும்பவில்லை.

ஈரானில் நடந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டின்போது அப்போதைய ஈரானிய ஜனாதிபதி அகமது நிஜாட்டுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இணைந்து நடத்தி செய்தியாளர் சந்திப்பில் இருநாடுகளும் இணைந்து மேற்குலகுக்கு எதிரான புதிய கூட்டணி ஒன்றை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதை அமெரிக்கா இலகுவில் மறந்துபோகாது.

இப்போது ஈரானில் அகமது நிஜாட் ஆட்சியில் இல்லை. அதேவேளை தனது அழுத்தங்களின் மூலம் ஓரளவுக்கு ஈரானைப் பணிய வைத்துள்ளது அமெரிக்கா.

மேற்குலக எதிரப்பை பகிரங்கமாக வெளிப்படுத்திய தலைவர்களின் எண்ணிக்கை இப்போது அருகிவிட்டது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் சிரிய அதிபர் ஆசாத்தும்தான் இப்போது அமெரிக்காவுக்குச் சவால் மிக்கவர்களாக எஞ்சியுள்ளனர்.

அமெரிக்காவை வடகொரியாக கடுமையாக எதிர்த்தாலும் அது உலக அரங்கில் தன்னைத்தானே ஒதுக்கி வைத்துக்கொண்டுள்ள நாடாக இருப்பதால் அதையிட்டு அமெரிக்காவுக்கு அவ்வளவு கவலையில்லை. ஆனால், இலங்கை போன்ற நாடுகளின் தலைவர்கள் தமக்கெதிராக அணி திரள முனைவதை அமெரிக்கா சகித்துக் கொள்ளாது. அதேவேளை இலங்கையைத் தமது கடுமையான தடைகள், அழுத்தங்களினால் தண்டிக்கவும் அமெரிக்கா தயாராக இல்லை. அது சீனாவுடனான நெருக்கத்தை அதிகப்படுத்திவிடும்என்றகவலையை இந்தியாவைப்போலவே அமெரிக்காவுக்கும் உள்ளது.

சீனாவின் பின்னால் ஒளிந்து கொண்டு வடகொரியா போன்று இலங்கை தன்னைத் தானே தனிமைப்படுத்திக்கொள்வதை இந்தியாவும் விரும்பவில்லை. அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை தன்னைத்தானேதனிமைப்படுத்திக்கொள்ளக் கூடாது என்று கூறியிருந்ததன் அர்த்தம் அதுதான்.

இலங்கையைக் கடுமையாகத் தண்டிக்கவும் மேற்குலகம் தயாராக இல்லை. அதேவேளை விட்டுக்கொடுக்கவும் தயாராக இல்லை என்றால் ஜெனிவாவில் அமெரிக்கா கொடுக்கும் அழுத்தங்களின் நோக்கம் தான் என்ன?

மியன்மாரைப்போன்று இலங்கையை மாற்றுவதே அந்த நோக்கம் என்று பலரும் கருதுகின்றனர். நீண்டகால இராணுவ ஆட்சியில் சீனாவினது நிழலில் இருந்த மியன்மாரை ஜெனிவா தீர்மானங்களினூடக அழுத்தங்களைக் கொடுத்து தமது வழிக்கு கொண்டு வந்துள்ளது. இதன் விளைவாக மியன்மாரில் ஓரளவுக்கு ஜனநாயக சூழல் மலர்ந்துள்ளதுள்ளது. முழுமையாக இராணுவ ஆட்சி அகலாது போனாலும் ஆங்சான்சூகி விடுவிக்கப்பட்டு ஜனநாயக ரீதியாக தேர்தல் நடத்தப்பட்டு ஊடகங்கள் மீதான கட்டுப்பாட்டுகள் தளர்த்தப்பட்டு, சர்வதேச சமூகம் விரும்பிய ஜனநாயக சூழல் மெல்லமெல்ல உருவாகத் தொடங்கியுள்ளது. ஆனால் அங்கு இராணுவ ஆட்சியை அகற்ற அமெரிக்கா முனையவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். ஒரு வேளை அதற்கான முயற்சியில் அமெரிக்கா இறங்கியிருந்தால் அத்தனை முயற்சிகளும் தோல்வியில் முடிந்திருக்கலாம். அத்தகைய விசப்பரீட்சையில் மேற்குலகம் இறங்கவில்லை.

மியன்மாரில் தமக்கு சாதகமான சூழலை உருவாக்குவதை இலக்காகக் கொண்டிருந்ததால் அந்த முயற்சியில் ஓரளவுக்கு வெற்றியும் பெற முடிந்துள்ளது. கிட்டத்தட்ட அதே வாய்ப்பாட்டைத்தான் இலங்கை விவகாரத்தை மேற்குலகம் பயன்படுத்த முனைவதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும் கண்ணுக்கு முன்னே மியன்மார் கற்றுக் கொடுத்துள்ள பாடங்களை அரசாங்கம் உதாசீனம் செய்தால் மேற்குலக இலக்கு அடுத்த கட்டங்களை நோக்கி விரிவடைவது தவிர்க்க முடியாததாகலாம்.

சுபத்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தூக்கைத் தூக்கில் இடுங்கள்; காந்தீயம் வென்ற இந்தியா



பேரறிவாளன்



சாந்தன்



முருகன்



"உயிர் இறைவனால் அளிக்கப்பட்டது. அதனைப் பறிக்க அவனைத் தவிர வேறு யாருக்கும் உரிமை இல்லை' என்றார் மகாத்மா. உயிரைப் பறிப்பது தவறு என்று முதன்முதலாக ஆட்சியாளர்களாலும் நீதித் துறையாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

"நல்ல சிந்தனையுடைய எல்லா மனிதர்களிடமும் இருக்க வேண்டிய மரண தண்டனைக்கு எதிரான மனநிலை பல நீதிபதிகளிடம் இல்லை. அவர்கள் மரண தண்டனை மூலமே குற்றங்களைக் குறைக்க் முடியும் என்று நினைக்கிறார்கள்' என்று உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி பி.என்.பகவதி சொன்னார். இதோ, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மனதிலும் மாற்றம் வந்துள்ளது.

"நெருப்பில் எரியும் உடல் விரைவில் வெந்து தணிந்துவிடுகிறது. ஆனால், தூக்குத் தண்டனை



சதாசிவம் சிவகீர்த்தி சிங்

விதிக்கப்பட்ட தண்டனைக் கைதியின் உடலும் மனமும் தூக்கிலிடப்படும் நாள் வரை ஒவ்வொரு நொடியும் எரிகிறது, தவிக்கிறது, துடிக்கிறது. இந்தக் குரூரத்துக்கு நாகரிக சமூகத்தில் நிச்சயம் இடம் இருக்க முடியாது" என்று சுட்டிக்காட்டி மூன்று பேரின் தூக்குத் தண்டனையை இரத்து செய்துள்ளது உச்ச நீதிமன்றம். இதனை ஏற்று முருகன், சாந்தன், பேரறிவாளனை மட்டுமல்ல ஆயுள் தண்டனை பெற்று சிறையில் உள்ள நளினி, ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் விடுதலை செய்ய தமிழக அமைச்சரவை முடிவு செய்தது. இதனை சட்டமன்றத்தில் அறிவித்தார் முதல்வர் ஜெயலலிதா. இந்த முடிவை மத்திய அரசு கடுமையாக எதிர்த்து மீண்டும் உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளது. எனவே, அந்தத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பேரறிவாளனும் முருகனும் சாந்தனும் வெறும் குறியீடுகள் தான். காப்பாற்றப்பட்டிருப்பதாக நாம் சொல்லும் உயிர் - மனிதாபிமானம், மனிதவுரிமை, மனச்சாட்சி ஆகிய மூன்றும்தான்!

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று காவு வாங்கும் காலம் முன்பிருந்தது. இன்று அப்படி இல்லை. குற்றத்தின் தன்மை அடிப்படையில் தண்டனைகள் தரப்படுகின்றன. குற்றவாளிகள் திருந்தி வாழும் வாய்ப்பை உருவாக்குபவையாக தண்டனைகள் இருக்க வேண்டும் என்றே உலக நாடுகள் பல உணர்ந்து செயற்படுகின்றன. ஆனால், நாம் இன்னமும் நூறு ஆண்டுகளுக்கு முந்தைய இந்தியன் பீனல் கோடு சட்டத்தை வைத்துக்கொண்டு மரண தண்டனை விதித்துக்கொண்டு இருக்கிறோம்.

"ஒருவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்றுவதன் மூலம் நாம் சாதிப்பது என்ன? அவர் மனம் திருந்தி, மனம் மாறி, இணக்கத்துடன் வாழும் சாத்தியப்பாட்டை, அது அரிதான சாத்தியப்பாடாக இருந்தபோதிலும் நாம் ஒரேயடியாக மறுத்துவிடுகிறோம். அவரது அறிவியல் வளர்ச்சிக்கான, மனச்சாந்தி வளர்ச்சிக்கான சாத்தியப்பாட்டையும் மறுத்துவிடுகிறோம்" என்று நீதி, அமைதி ஆகியவற்றுக்கான ஐரீஷ் ஆணையம் கூறியது.

ராஜீவ் கொல்லப்பட்டது 21.5.1991. அதற்கு 14 நாட்களுக்கு முன்னர் சென்னையில் இருந்த சிவராஜன், ஈழத்தில் இருந்த பொட்டு அம்மானுக்கு வயர்லெஸில் ஒரு செய்தி சொல்கிறார். அதில், "நமது நோக்கம், எங்கள் மூவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது" என்று சொல்கிறார். மூவர் என்று சிவராஜன் சொல்வது தன்னையும் சுபா, தணு ஆகியோரையும்தான். தணு, ஸ்ரீபெரும்புதூரில் மனித வெடிகுண்டாக இறந்துபோனார். சிவராஜனும், சுபாவும் பெங்களூரில் தற்கொலை செய்துகொண்டார்கள். அதாவது, சதிசெய்த மூவருமே இல்லை. அந்த வயர்லெஸ் செய்தியை நம்பினால், சிவராஜன், சுபா, தணு தவிர மற்றவர்களுக்கு சதியில் பங்கு இல்லை என்பதை நம்பித்தானே ஆக வேண்டும். கைதானவர்கள், இந்தச் சதியை உணராமலேயே உடன் இருந்தவர்கள் என்பது சி.பி.ஐ. சொல்லும் ஆதாரத்திலேயே தெரிகிறதே!.

ராஜீவ் வழக்கில் மொத்தம் 26 பேருக்கு பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் 1998ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. தமிழர் உயிர்காக்கும் நிதி திரட்டி இவர்களது விவகாரத்தை பழ.நெடுமாறன் முன்னெடுத்தார். இதன் மூலமாக 22 பேரை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்தது. ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரது தண்டனையையும் ஆயுள் தண்டனையாக நீதிபதிகள் குறைத்தார்கள். நளினி, சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகிய நால்வருக்கும் மரண தண்டனையை உறுதி செய்தார்கள். இந்த நால்வரும் மறு ஆய்வு மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள். அந்த மனு 1999ஆம் ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்டது. தமிழக ஆளுநர் பாத்திமா பீவிக்கும் கருணை மனு அனுப்பினார்கள். அவர் தமிழக அமைச்சரவைக்கு அனுப்பினார். அன்று தமிழக முதல்வராக கருணாநிதி இருந்தார். நளினி தவிர ஏனைய மூவரது கருணை மனுக்களையும் நிராகரிப்பதாக அமைச்சரவை முடிவுசெய்தது. இதைத் தொடர்ந்து முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் மீண்டும் மத்திய அரசுக்கு அனுப்பினார்கள்.



2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி ஆகிய இருவரிடமும் நெடுமாறன், மணியரசன், தியாகு, கார்முகில் ஆகிய நால்வரையும் அழைத்துச் சென்று கோரிக்கை வைக்க ஏற்பாடு செய்தார் வைகோ. "சிறையில் இருக்கும் நால்வரையும் விடுதலைசெய்ய வேண்டும" என்று இவர்கள் கோரிக்கை வைத்தார்கள். இதில் ஏதாவது முடிவெடுத்தால் காங்கிரசுடன் மோத வேண்டி இருக்கும் என்பதால், பி.ஜே.பி. மௌனமாக இருந்தது. 2004இல் ஆட்சி மாறி, காங்கிரஸ் அரசாங்கம் வந்தது. அவர்களும் இந்தக் கருணை மனுக்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி கருணை மனுக்களை ஜனாதிபதி நிராகரித்தார். இந்தத் தகவல்கள் சம்பந்தப்பட்ட கைதிகளுக்கு தமிழக உள்துறையால் சொல்லப்பட்டது.



நாகப்பன்



ராம்ஜெத்மலானி



சத்தியநாராயண



வைகோ

மூவரும் சேர்ந்து சென்னை உயர் நீதிமன்றத் தில் தடை மனுத் தாக்கல் செய்தார்கள். இந்த மூவர் சார்பில் வாதிட இந்தியாவின் மிக மூத்த வழக்கறிஞர்களில் ஒருவரான ராம்ஜெத் மலானியை வைகோ அழைத்து வந்தார். சென்னை உயர் நீதிமன் றத்தில் ஆஜரான அவர், வேலூர் சென்று கைதிகள் மூவரையும் சந்தித்தார். "இவர்கள் நிச்சயம் விடுதலை ஆவார்கள்" என்று சொன்னார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் நாகப்பன், சத்தியநாராயணன் ஆகியோர் அடங்கிய குழு "தூக்குத் தண்டனை விதிக்கத் தடை" என்று அறிவித்தது. அதன் பின்னர் இந்த வழக்கின் விசாரணையை உச்ச நீதிமன்றத்துக்கு மாற்றினார்கள். அதிலும் ராம்ஜெத்மலானி ஆஜரானார். இதுவரை நடந்த 24 வழக்குகளுக்கும் ராம்ஜெத்மலானி வந்தார். தமிழகத்தில் இருந்து வைகோ மற்றும் வழக்கறிஞர் தேவதாஸ் ஆகியோர் சென்றார்கள். ராம் ஜெத்மலானியின் வாதங்களைப் பார்த்த நீதிபதிகள். இனிமேல் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகள் வந்தால், அதற்கு நதிமன்றத்தில் ஆலோசனை சொலலும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார்கள். இந்த வழக்கு தான் கடந்த 18ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் வந்தது.

"இப்போது தூக்குத் தண்டனை இரத்துசெய்யப்படும் இந்த மூன்று பேரும் 23 ஆண்டுகளை சிறையில் கழித்துவிட்டதால், அவர்களின் ஆயுள் தண்டனையையும் இரதது செய்து அவர்களை விடுதலை செய்யலாம். இதுபற்றி மாநில அரசு உரிய முடிவை எடுத்துக்கொள்ளலாம். அப்படி மாநில அரசு முடிவெடுப்பதற்கு சட்டப்பிரிவு 432, 433-ஏ ஆகியவற்றில் இடம் உள்ளது. அல்லது, மாநில அரசு தன்க்கு இருக்கும் தனிப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தியும் அவர்களை விடுதலை செய்யலாம" என்று தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

நம்பிக்கை கீற்றை ஒளிர்விடச் செய்துள்ளது உச்ச நீதிமன்றம்!

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மாவட்டங்களில் கால்வாய்நோய் தாக்கம்; மூன்று மாதங்களுக்கு இறைச்சி விற்பனைக்கு தடை

(கொழும்பு)

மிருகங்களுக்கு ஏற்படும் 'கால்வாய்' நோய் அல்லது கோமாரி நோய் அநுராதபுரம், புத்தளம், திருகோணமலை, அம்பாறை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள கால் நடைகளை பாதித்திருப்பதனால், இம் மாவட்டங்களில் இருந்து மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி மற்றும் ஆட்டிறைச்சியைக் கொண்டு வருவதும் அவற்றை இறைச்சிக் கடைகளில் வைத்து விற்பனை செய்வதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நோயினால் பசுமாடுகள், எருமை மாடுகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் பன்றிகள் ஆகிய விலங்கினங்கள் பாதிக்கப்பட்டு இருப்பதனால், அவற்றை மறு அறிவித்தல் வரையில் உண்பது உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கிழைக்கும் என்று கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் டபிள்யு.கே.டி.சில்வாவின் பெயரில் வெளியிடப்பட்டுள்ள விசேட அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி வெளிவந்த திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்கு இந்தத் தடை உத்தரவு அமுலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது. இக்கட்டளை அமுலில் இருக்கும் காலப்பகுதியில் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் தொற்று நோய் பரவி இருக்கும் பிரதேசங்களில் இருந்து வேறு இடங்களுக்கு இந்நோய் பரவுவதை தடுப்பதற்காக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

நோய் தொற்றத்தக்க விலங்குகளில் செயற்கைமுறை இனவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நோய் தொற்றத்தக்க விலங்குகளை அறுத்தல் மற்றும் நோய் தொற்றத்தக்க விலங்குகளை விலங்கு சந்தைக் கண்காட்சிகளில் மற்றும் போட்டிகளில் பங்குபற்றுவதை தடை செய்தல் போன்ற விதிகள் இதன்மூலம் அமுலாக்கப்பட்டுள்ளன.

இந்நோயினால் இறந்த விலங்குகளை பாதுகாப்பாக புதைத்து விட வேண்டும் என்றும் அவற்றை நீர்த்தேக்கங்கள், குளங்கள், ஆறுகளில் அழுகிய நிலையில் விட்டு விடுவது தண்டனைக்குரிய குற்றம் என்று இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளையில் மட்டக்களப்புக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன வீதித் தடைகளை பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ளு மாறு பொலிஸாருக்கு விடுத்துள்ள பணிப்புரையில் நோயினால் பாதிக்கப்பட்ட விலங்குகளை அல்லது அவற்றின் இறைச்சியை சட்ட விரோதமாக வாகனங்களில் ஏற்றிச் செல்வதை முற்றாக தடைசெய்து அக்குற்றத்தை செய்பவர்களை கைது செய்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அடுத்த மூன்று மாத காலத்தில் கால்வாய் அல்லது கோமாரி நோய் புதிதாக மிருகங்களுக்கு பரவவில்லை என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்னர் மூன்று மாதங்களுக்கு பின்னர் இந்த கால்நடை வளர்ப்பும், இறைச்சி விற்பனையும், பால் உற்பத்திக்கு எதிரான இந்த தடை உத்தரவும் அரசாங்கத்தினால் நீக்கப்படும்.

கால்வாய் நோய் கால் நடைகளையே பாதித்திருக்கின்ற போதிலும் பாதிக்கப்பட்ட இம்மாவட்டங்களில் உள்ள கோழிகளுக்கு எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை. இப்பிரதேசத்தில் இருந்து கோழிகளையும் முட்டையையும் விற்பனை செய்வதற்கு எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை.(அ-2-250)



யாழ். மாவட்ட பாடசாலை மட்டத்தில் ஆங்கில விவாத போட்டியில் பங்கு கொள்ளும் மாணவர்களுக்கான செயலமர்வு நேற்று சென்,ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. இச் செயலமர்வை வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஆரம்பித்து வைப்பதையும் வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் தம்பிக்கா செயலமர்வை நடத்துவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் என்.குமார்)

# வடக்குக் கிழக்கு காணி விவகாரங்களுக்கு விசேட காணி மத்தியஸ்த குழு அமைக்கப்படும்

வட கிழக்கு மாகாணங்களில் காணி விவகாரங்கள் தொடர்பில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நீதியமைச்சு ஒரு விசேட காணி மத்தியஸ்த குழுவை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளது.

இதனூடாக காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க இணக்கப்பாடுகளை காணக்கூடியதாக இருக்கும் என குறிப்பிட்ட நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பதற்கு ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் முன் வந்திருப்பதாகவும் கூறினார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் சட்ட அமுலாக்கம், நீதியைப் பெறும் வழிமுறைகள் மற்றும் சமூக இணைப்பைப் பலப்படுத்தல் எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு சர்வதேச தொடர்புகளுக்கும் உபாயங்களுக்குமான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் இடம் பெற்றது. இங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் செயற்திறன்மிக்கதும், பாரபட்சமற்றதும் சகல சமூகத்தினருக்கும் பயன்தரத்தக்கதுமான நீதி முறைமையை நடைமுறைப்படுத்துவதில் கூடுதல் கரிசனை செலுத்தப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) நாட்டின் சகலரும் நீதியைப் பெறுவதற்கான வழிமுறைகளை சரிவர அடைந்து கொள்வதற்காக நீதியமைச்சு உட்பட புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு என்பவற்றின் ஊடாக சிறப்பான செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளன.

சட்ட உதவி வழங்கல், மத்தியஸ்தம் செய்து வைத்தல் என்பவற்றுக்கான ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. தேசிய சட்ட உதவி கொள்கையை வகுப்பதிலும் ஐ.நா அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் உரிய பங்களிப்பைச் செய்து வருகின்றது.

2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு மக்களுக்கு சட்ட உதவி சென்றடைவது பற்றிய பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தது. பல குறைபாடுகளும் அவ் ஆய்வின் மூலம் இனங்காணப்பட்டது.

மக்களில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் தரப்பினரான பெண்கள், சிறுவர், சிறுமியர் ஆகியோர் உரிய சட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்வது பற்றியும் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

யுத்தத்தின் பின்னரான காலப் பகுதியில் காணி சம்பந்தமாக எழும் பிரச்சினைகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. வட கிழக்கு மாகாணங்களில் காணி விவகாரங்கள் தொடர்பில் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நீதியமைச்சு ஒரு விசேட காணி மத்தியஸ்த குழுவை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளது.

இதனூடாக காணி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க இணக்கப்பாடுகளை காணக்கூடியதாக இருக்கும். அமைச்சின் இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பதாக ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் இணக்கம் தெரிவித்திருக்கிறது என்றார்.

வெளிநாட்டு தூதுவர்களும், உயர் ஸ்தானிகர்களும், அதிதிகளும் கலந்து கொண்ட இந் நிகழ்வில் ஐ.நா உதவிச் செயலாளர நாயகம் ஹேயோ லியங்கயூ பிரதான உரையாற்றினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகப் பகுதியின் வளப்பற்றாக்குறை தொடர்பில் நேற்று ஆராய்வு

தீவகப்பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்ட கல்வி அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவினர் பாடசாலைகளிலுள்ள வளப்பற்றாக்குறை மற்றும் வீதி புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை, அப்பகுதி பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் வளப்பற்றாக்குறை மற்றும் கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளமை தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதனைவிட சுகாதாரம், குடிநீர் வசதிகள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலமும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலமும் பாடசாலைகளிலுள்ள தளபாடம் மற்றும் கட்டட வளப்பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்யப்படுமெனவும் இதன்போது உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து நடவடிக்கைகளை இலகுபடுத்தவும் பாதுகாப்பான போக்குவரத்திற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள வீதிகளை விரைவாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

யாழ். தீவகப்பகுதிக்கு நேற்றைய தினம் விஜயத்தை மேற்கொண்ட இந்தக்குழுவில் வடக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டு, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் வி.கனகரட்ணம் உள்ளிட்டவர்கள் சென்றிருந்தனர். (அ-6)

# ஜெயலலிதாவின் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## மத்திய அமைச்சர் ஜீ.கே.வாசன் தெரிவிப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை யுடன் தொடர்புடைய ஏழு குற்றவாளி களை விடுதலை செய்ய தமிழக முதல்வர் ஜெயலலிதா எடுத்த தீர்மானம் துரதிர்ஷ்டவசமானது என மத்திய அமைச்சர் ஜீ.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெயலலிதாவின் இந்த தீர்மானம் மறுபரிசீலனை செய்ய ப்பட வேண்டும் எனவும், இந்தத் தீர்மானமானது தேசிய பாதுகாப்பு டன் தொடர்புடையது.

குறித்த குற்றவாளிகளை விடுதலை செய்தால் அது தேசிய பாதுகாப்பு தொடர்பான சிக்கல்களை ஏற்படுத்தக் கூடும்.

மாநில அரசாங்கம் இதனை விடவும் பொறுப்புணர்ச்சியுடன் தரமானங்களை எடுத்திருக்க வேண்டும்.

மனிதாபிமான அடிப்படையில் மாநில அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு மத்திய அரசாங்கம் அனுமதி வழாங்காது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானம் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

தமிழக மாநில அரசாங்கம் உள்ளிட்ட பல்வேறு மாநில நிர்வாகங்களுடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி சண்முகதாஸ் அழகம்மா

கல்வயல், ஓராம் கட்டையைச் சேர்ந்த சண்முகதாஸ் அழகம் மா கடந்த22 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### குமரப்பெருமாள் சரவணப்பெருமாள்

சுழிபுரம் பறளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமரப்பெருமாள் சரவணப்பெருமாள் கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### முருகேசு ஆறுமுகம்


சண்டிலிப்பாய் மாசியப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஆறுமுகம் கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப் பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### நவரத்தினம் வரதராஜா

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Gummersbach ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் வரதராஜா கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு friedhof near FriedhofstraBe, 51645, Dieringhausen, Gummersbach, Germany என் னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சிவசுப்பிரமணியம் பாலகுமாரன்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் பாலகுமாரன் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### செல்லத்துரை அழகராசா

தச்சந்தோப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அழகராசா கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை சண்டிலிப்பாய் மத்தி சண்டிலிப்பாயில் நடைபெற்று பூதவுடல் தச்சந்தோப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# வறட்சியால் நெல் உற்பத்தி வீழ்ச்சி; அரிசி விலை அதிகரிக்கக்கூடும்

இலங்கையில் நிலவும் வறட்சியினால் இம்முறை பெரும்போக நெல் வேளாண்மை செய்கையில் 35 சத வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடுகள் மூலம் தெரியவருகின்றது.

தேசிய நெல் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சி காரணமாக அரிசி விலையும் அதிகரிக்கக் கூடும என்று விவசாய அமைச்சு கூறுகின்றது.

தற்போது நிலவும் வறட்சி நிலை காரணமாக அதிக நெல் விளைச்சலை தரும் மாவட்டங்களான அம்பாறை, அநுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலும் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சாகுபடி முடிவடையும் நிலையிலுள்ள பெரும்போக நெல் வேளாண்மை செய்கையில் வீழ்ச்சி காணப்பட்டாலும் சில மாதங்களுக்குத் தேவையான நெல் கையிருப்பு அரச களஞ்சியங்களில் இருப்பதாக விவசாய அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.டி.வி. மீகஹாமுல்ல தெரிவித்துள்ளார்.

எனினும், அரிசி விலையை தீர்மானிப்பவர்களாக அரிசி ஆலைகளின் உரிமையாளர்களே இருப்பதாகவும், அரிசி விலையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என அமைச்சு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரிசி விலையை அரிசி ஆலைகளின் உரிமையாளர்களே தீர்மானிப்பதாக கூறப்படுவதை நிராகரித்துள்ள அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள், அரிசி விலை அதிகரிப்பு என்பது அரசாங்கத்தின் கைகளிலேயே இருப்பதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த ஆண்டு அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ள நெல் கையிருப்புகள் அரசியல் செல்வாக்குகள் இன்றி அரிசி ஆலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டால் அரிசி விலை உயர்வை தடுக்க முடியும் என்று அரிசி ஆலையொன்றின் உரிமையாளர் கூறியுள்ளார்.

இதனிடையே, அம்பாறை மாவட்டத்தில் வறட்சி நிலவினாலும் நீர்ப்பாசனத்தை நம்பியிருக்கும் தாழ்நில வேளாண்மை செய்கைக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்றும் குளங்களிலிருந்து நீர் கிடைத்ததால் அமோக விளைச்சலை தாம் இம்முறை பெற முடிந்ததாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மழைநீரை முழுமையாக நம்பியிருக்கும் மேட்டு நிலங்களில் வேளாண்மை செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கே வறட்சியினால் இழப்புகள் அதிகம் என்று உள்ளூர் விவசாய அமைப்பொன்றின் தலைவர் தெரிவித்தார்.

எனினும், உள்ளூர் சந்தையில் தற்போதைய நிலவரத்தின்படி அரிசி விலை இன்னும் அதிகரிக்கவில்லை. தற்போது நடக்கும் பெரும்போக வேளாண்மை சாகுபடி முடிந்த பின்னர் அரிசி விலை சற்று அதிகரிக்கக் கூடும் என்று எதிர் பார்க்கப்படுவதாக வர்த்தகர்கள் கூறுகின்றனர். (அ-2)

# இலங்கை-இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு முன்வைப்பு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள். அதே நேரம் இலங்கை மீனவர்களும் இந்திய கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவர் என்ற தீர்வை இலங்கை முன்வைக்கவுள்ளது.

இலங்கை- இந்திய மீனவர்களுக்கு இடையில் அடுத்த கட்ட பேசசுக்கள் கொழும்பில் இடம் பெறும் போது இந்த யோசனை முன்வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இதன் மூலம் இரண்டு நாட்டு மீனவர்க ளும் கூட்டுத்தொழிலில் ஈடுபட வாய்ப்பு ஏற்படும். இதே வேளை இரண்டு நாட்டு மீனவர்களும் மாற்று நாடு களின் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடு படும் போது பிடிக்கப்படும் மீன் கள் எந்த நாட்டு கடற்பரப்புக்கு சொந்த மா னதோ அந்த நாட்டு துறைமுகத் துக்கு வருமானம் வரக்கூடிய அள வில் குறித்த மீன்களின் ஏற்றுமதிகள் மேற்கொள் ளப்படவேண்டும்.

இது நடைமுறையில் பல்வேறு நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றன.

இதேவேளை தமிழக முதல்வர் ஜெயலலிதா, தமிழக மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடிப் பிரதேசத்தை கொண்டுள்ளனர் என்று கூறிவருவதை அமைச்சர் நிராகரித்தார்.

இதேவேளை ஆந்திரப் பிரதேசத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 5 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நேற்று இந்திய கடற்படையினரால் இலங்கை கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# கைவினைப்பொருள் உற்பத்திக்கு தேசிய விருது வழங்கும் விழா

'ஷில்ப' எனப்படும் கைவினைப் பொருள் உற்பத்தியாளர்களுக்கான தேசிய விருது வழங்கும் விழா இன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவை என்பவை இணைந்து நடத்தும் இந்த தேசியவிருது வழங்கும் நிகழ்வில், நாடு முழுவதிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 334 கைவினைப் பொருள் உற்பத்தியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த தேசிய நிகழ்வு தொடர்பிலான செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது

நாடு பூராகவும் பிரதேச, மாவட்ட, மாகாண மட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கைவினைப் பொருள் உற்பத்தியாளர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்களிலிருந்து இந்த 334 சிறந்த கைவினைப் பொருள் உற்பத்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T.P.:- 0212223378
Fax:-0212227829
Email: valampurii@yahoo.com

# ஐ.நாவில் இரகசிய வாக்கெடுப்பு; ஆங்கில இதழ் வலியுறுத்துகிறது

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு நாட்டுக்கு எதிராக பிரேரணை கொண்டு வரும் போது வாக்களிப்புக்களை இரகசியமான முறையில் மேற் கொள்ள வேண்டும் என்று இலங்கை ஆங்கில இதழ் ஒன்று வலியுறுத்தி யுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவா மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேர ணையை அமெரிக்காவும் பிரித்தா னியாவும் கொண்டு வரவுள்ளன.

இதற்காக அந்த நாடுகள் ஏனைய உறுப்பு நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றன.

இந்த விடயத்தில் இரண்டு நாடு களினதும் பொருளாதார மற்றும் வல்லரசுத் தன்மைகள் தாக்க த்தை ஏற்படுத்தி நிற்கின்றன.

குறிப்பாக ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இலங்கைக்கு சார்பாக வாக்களிக்கப் போவதாக பகிரங்க மாகவே அறிவித்துள்ளன. எனி னும் ஏனைய சிறிய நாடுகள் வெளிப்படையாக தமது நிலைப பாட்டை வெளியிடுவதில் சிக்கல் களை எதிர் நோக்குகின்றன.

குறிப்பாக சில நாடுகளை அமெ ரிக்கா அச்சுறுத்தி தமது பக்கம் வாக்களிக்க வைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.

ஜெனீவாவிலுள்ள சில இராஜ தந்திர தரப்புக்கள் இதனை உறுதி ப்படுத்தியுள்ளன. இதன் காரண மாக அந்த நாடுகள் பாதுகாப்பு மற் றும் பொருளாதார ரீதியில் அமெ ரிக்காவிடம் இருந்து அச்சுறுத் தலை எதிர்நோக்குகின்றன.

இந்நிலையில் ஐக்கிய நாடுக ளின் மனிதவுரிமைகள் பேரவை யில்இலங்கை தொடர்பானபிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் போது ஆதரவு மற்றும் எதிர்ப்பு நாடுகள் என்ற விடயம் தெளிவாக தெரிய வரும்.

எனவே, இதனை தவிர்ப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை இனிவரும் காலங்களில் இரகசிய வாக்கெடுப்பை அறிமுகப்படுத்த வேண்டும் என்று ஆங்கில இதழ் கோரியுள்ளது.

அதேநேரம் இலங்கையும் தொடர்ந்தும் சர்வதேச ரீதியில் இவ்வாறான தோற்றப்பாட்டை உருவாக்குவதை தவிர்க்கும் முக மாக நல்லிணக்க விடயத்தில் தமது முன்னேற்றத்தை காட்ட முன்வர வேண்டும் என்றும் ஆங்கில இதழ் கேட்டுள்ளது. (அ-2)


## காணி/ வீடு விற்பனைக்கு

**கொக்குவில்** (காணி/ வீடு விற்பனைக்கு)
கொக்குவிலில் 2 பரப்பு காணி சகல வசதிகளுடனும் கூடிய வீட்டுடன் (பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு. (A/001)

**சங்கானை** (காணி/ வீடு விற்பனைக்கு)
சங்கானை பிரதான வீதியில் 5 பரப்பு காணியுடன் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. (A/002)

**கோண்டாவில்** (காணி/ வீடு விற்பனைக்கு)
கோண்டாவில் (வடக்கு) இல்9 பரப்பு 6.94 குளிகாணிசகல வசதிகளுடன் கூடிய வீடு (பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு. (A/003)

**யாழ்ப்பாணம்** (காணி விற்பனைக்கு)
யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவில் 3 பரப்பு 13 குளி காணி (கிணறு , பயன்தரு மரங்களுடன்) விற்பனைக்கு உண்டு. (A/004)

**கொடிகாமம்** (காணி விற்பனைக்கு)
கொடிகாமம் ஐயனார் கோவில் வீதியில் 14 பரப்பு காணி (தென்னை, மா, பனைகளுடன்) உடன் விற்பனைக்கு. (A/005)

**யாழ்ப்பாணம்** (காணி விற்பனைக்கு)
யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் (பருத்தித்துறை, நாவலர் வீதிக்கு சமீபமாக) 1 பரப்பு 7 குளி காணி உடன் விற்பனைக்கு. (A/006)

**கோப்பாய்** (காணி/ வீடு விற்பனைக்கு)
கோப்பாய் வைத்தியசாலைக்கு அண்மையில் சகல வசதி களுடன் கூடிய வீடு 2 பரப்பு 16.5 குழி காணியுடன் (தென்னை, மா, பலா, தோடை என பயன் தரு மரங்களுடன்) உடன் விற்பனைக்கு உண்டு. (A/007)

**நல்லூர்** (காணி/ வீடு தேவை)
நல்லூர், கந்தர்மடம், பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் காணி/ வீடு விற்க விரும்புப வர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். (B/001)

றியல் எஸ்ரேற்
இல. 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்திக்கும் நீராவியடி பிள்ளை யார் கோவிலுக்கும் இடையில்) எனும் முகவரியில்

TP.No: 021 567 1543

பதிவுக் கட்டணம் ரூபா 1000 /-

அலுவலக நேரம் 8.30 - 12.30,
1.30- 5.00 மணிவரை
வெள்ளிக்கிழமை விடுமுறை.


**ஜெயகாந்தன் வைத்தியசாலையில்**

புகழ்பெற்ற எழு த்தாளரும் தமிழ் இலக்கியவாதியு மான ஜெயகாந்தன் சென்னையிலுள்ள தனி யாா வைத்தி யசாலையில் அனும திக்கப்பட்டுள்ளார்.

இவர் சமீபகால மாக உடல் நலக் குறைவால் அடிக் கடி சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கி ழமை அவரது உடல நிலை மோசமடை ந்ததை தொடர்ந்து வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட் டுளளதாகவும் அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும இந் திய தகவல்கள் தெரி வக்கின்றன. (அ-2)

## புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் -2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கு மீள அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்க மையவும், பிரதம செயலாளரின் 2012.12.13 ஆம் திகதிய NP/01/02/04/01 இலக்க கடிதத்திற்கமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள**

01. இப்பதவி நிரந்தரமானதும், ஒய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.

02.ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

03.நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்த ப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

01.விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறை யாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூ ராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.

03. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04. விண்ணப்பதாரி புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படு வதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் விதிக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

01. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா நூறு (100/-) செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

02.விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படா திருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு **"செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு"** என்ற முகவரிக்கு 10.02.2014 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

04. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.

05. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் பின்னவராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பதிலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படு வதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

பதவி பற்றிய விபரங்கள்

| பதவி இல | பதவிகள் | வெற்றிடம் |
|---|---|---|
| 01 | காவலாளி | 03 |

சம்பள அளவுத்திட்டம - PL-1-2006A (11730-10X120-10X130-10X145-12X160-17600)

**கல்வித் தகைமை**

01.கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (5) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(சி-6584)

**கு.மதிலைநாதன்,**
**செயலாளர்,**
**பிரதேசசபை புதுக்குடியிருப்பு**

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1985 12 09



விண்ணில் 25 02 2012

(சி-6579)

**அமரர் திரு:செல்லையா ஜெயபாலன்**

பாசமுள்ள என் சகோதரனே பவனியில் உடன் பிறப்புக்களாய்
அவதரித்த நாங்கள் அன்புடனும் ஆசையுடனும் ஒருவரையொருவர்
இணை பிரியாது வாழ்ந்தோம் கூடிப் பள்ளி போனோம்
தேடி வர நலமெல்லாம் சேர்ந்திங்கே
நாம் பெற்றோம் ஓடி சென்று மறைந்த தென்ன
ஆண்டு இரண்டு சென்றாலும் உயிர் தவிக்க வைக்குதையா

6 ஆம் கட்டை,
அம்பாள்புரம்.

தகவல்:
சகோதரன் செ.குகன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பால் முகம் காணாத குழவி தாய் முகம்
நோக்க, தாய் என்முகம் நோக்க, நான்
நின்முகம் நோக்கி வந்தேன் மன்னா!
– சங்கப் புலவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பாலுக்காக அழுகிறது குழந்தை இங்கோ! கட்டாக்காலியாக ஆநிரைகள்

பால்மாப் பைக்கற்றுக்களின் விலை உயர்வும் அவற்றின் தட்டுப்பாடும் எங்கள் குழந்தைகளின் போசாக்கு நிலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றன என்பது நிறுத்திட்டமான உண்மை.

பால்மாப் பைக்கற்றுகளின் விலை அதிகரிக்கின்ற போது அதிலிருந்து எடுக்கப்படக் கூடிய தீர்மானம், பசுமாடுகளை வளர்க்க வேண்டுமென்பதாகும்.

எனினும் பசுமாடுகளை வளர்ப்பதற்கு நாங்கள் தயாரா? என்ற கேள்வி ஏற்படவே செய்கிறது. இருந்தும் அதனை ஒரு புறம் வைத்துக் கொண்டால்,

பசுமாடுகளை இலவசமாக வழங்கினால் நாங்கள் அவற்றை வளர்க்கத் தயார் என்ற நிலைப்பாட்டில் இருக்கக் கூடியவர்களும் உள்ளனர் என்பதை மறந்து– மறுத்துவிட முடியாது.

எனவே அத்தகையவர்களை, பசுமாடுகளை வளர்க்கும் வகையில் ஊக்குவிக்க வேண்டும். இதற்கான முன்னெடுப்புக்களை செய்வதற்கு தீவகத்தில் கட்டாக்காலிகளாக அலைந்து திரிகின்ற சுமார் மூவாயிரம் பசுமாடுகளை மாடு வளர்ப்புத் திட்டத்திற்குப் பயன்படுத்த முடியும்.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் குறைந்தது ஐந்தாயிரம் லீட்டர் பாலை நாளாந்தம் உற்பத்தி செய்யும் வாய்ப்பு இருக்கிறது.

ஒரு நாளைக்கு கிடைக்கும் ஐந்தாயிரம் லீட்டர் பாலின் பெறுமதி சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயாகும்.

ஆனால் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து அவற்றை மாடு வளர்ப்புத் திட்டத்துக்குள் உட்படுத்த எந்த வித நடவடிக்கைகளும் இல்லாததன் காரணமாக எங்கள் பிள்ளைகளின் போசாக்கிற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய பசும்பால் வீண் போகிறது.

இது தவிர, கட்டாக்காலி மாடுகளை வேட்டையாடுகின்ற பாவகாரியங்கள் நடப்பதுடன் தீவகத்தில் நெல் விதைப்பு என்பது முற்றுமுழுதாக பாதிப்படைந்துள்ளது.

ஒருகாலத்தில் மொட்டைக் கறுப்பன், பச்சைப் பெருமாள் அரிசிக்கு பெயர்போன தீவகம் இப்போது வயலுமில்லை விதைப்புமில்லை என்றாகிவிட, அங்குள்ள வயல் நிலங்கள் வானம் பார்த்த பூமியாக, விதைப்போனுக்காய் காத்துக்கிடக்கிறது.

வயலுக்கு வேலி அமைத்து விதைப்பு நடத்துவது என்பது நடவாத காரியம் என்பதை நாம் சொல்லி எவரும் புரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

எனவே தீவகத்தில் கட்டாக்காலிகளாக திரிகின்ற பசுமாடுகளை பிடித்து யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவற்றை பகிர்ந்தளிப்பதன் மூலம் அந்தக் குடும்பங்களின் பசும்பால் தேவை ஈடுசெய்யப்படும். அத்துடன் தீவகத்தின் வயல் நிலங்கள் விதைப்பைக் கண்டு நெல் உற்பத்திக்கும் பெரும் பங்களிப்பை ஆற்ற முடியும்.

ஆகையால் இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய கவனம் எடுக்க வேண்டும்.

# மகசீன் சிறையிலிருந்த தமிழ் அரசியல் கைதி மரணம்

(கொழும்பு)

மகசீன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியொருவர் மர்மமான முறையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பிரிட்டிஷ் பிரஜையான 43 வயதுடைய விசுவலிங்கம் கோபிதாஸ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வடமராட்சியின் மந்திகையினை சொந்த இடமாக கொண்ட அவர், பிரித்தானியாவில் இருந்து இலங்கை வந்திருந்தவேளை, விடுதலைப் புலிகளிற்கு நிதி உதவி வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 2007-ம் ஆண்டு மார்ச் மாதம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைதாகியிருந்தார். இவரது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் தொடர்ந்தும் பிரிட்டனிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த ஏழு வருடங்களாக குற்றச்சாட்டுக்கள் ஏதும் முன்னிறுத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டிருந்த விசுவலிங்கம் கோபிதாஸ் நேற்று சி பிரிவின் மலசலகூடத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவரது மரணத்தில் மர்மம் இருப்பதாகவும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் சக அரசியல் கைதிகள் தன்னிடம் கோரியிருப்பதாக வட மாகாணசபையின் உறுப்பினர் அனந்தி சசிதரன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

கடந்த 2011-ம் ஆண்டின் நவம்பரில் இச்சிறையில் இடம்பெற்ற கலவரத்தில் சிங்கள தண்டனை கைதிகளால் நிர்வாணமாக்கப்பட்டு கோரமாக சித்திரவதைகளிற்கு உள்ளான அவர், அப்போது படுகாயமடைந்து உயிர் தப்பியிருந்தார். அதே போன்று 2012 ஜனவரியில் இடம்பெற்ற மற்றொரு கொலை முயற்சியிலும் அவர் உயிர் தப்பியுள்ளார். தற்போது இவரது சடலம் வெலிக்கடை சிறைச்சாலையின் வைத்தியசாலையில் வைக்கப்பட்டு உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# தனியார் வீட்டிலிருந்து இராணுவம் வெளியேறியது

யாழ்.விக்ரோறியா வீதியில் தனியாருக்குச் சொந்தமான வீட்டிலிருந்த இராணுவத்தினர் வெளியேறியதுடன் புத்தர் சிலைகளும் அகற்றப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் தனியார் வீடொன்றை இராணுவத்தினர் அபகரித்து அதில் பயணிகள் சுற்றுலா விடுதியை நடத்தி வந்தனர்.

அத்தோடு அக்காணிக்குள் புத்தர் கோயிலையும் நிறுவி புத்தர் சிலைகளையும் அமைத்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த 19ஆம் திகதி சுற்றுலா விடுதியாக இயங்கிய குறித்த தனியார் வீட்டை உரிமையாளரிடம் கையளித்துள்ளனர்.

இந்நிலையில் அங்கிருந்த புத்த கோயிலையும் மூடியுள்ள இராணுவத்தினர் புத்தர் சிலைகளை வேறிடத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

தற்போது யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினரின் காவலரண்கள் அகற்றப்பட்டு காணிகளும் வீடுகளும் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# 10 பேரை குளவி கொட்டியது

டிக்கோயா போடைஸ் பகுதியில் தேயிலை தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் மீது குளவி தாக்கியுள்ளது.

குளவி தாக்குதலுக்கு உள்ளாகி டிக்கோயா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பத்து பேரில் ஏழு பேர் வீடு திரும்பியுள்ளதாகவும் மூன்று பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# போலி வெளிநாட்டு நாணயத்தாளுடன் இருவர் கைதாகினர்

போலி வெளிநாட்டு நாணயத்தாள்களை வைத்திருந்த இரண்டு பேர் வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

50 ஸ்ரேலிங் பவுண்ட் பெறுமதியான போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடமிருந்து ஆறு போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படையினர், வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் வவுனியா, செட்டிக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

வெளிநாட்டிலிருந்து வந்த நபர் ஒருவர் தமக்கு இந்த நாணயத்தாள்களை வழங்கியதாக சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். (அ-2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரம் திருக்கோயில் மகோற்சவம் கடந்த 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெற்று வருகிறது.

இதில் நாளை புதன்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெற்று அதனை தொடர்ந்து 8 மணிக்கு பெருமான் தேரில் ஆரோகணித்து அருள் பாலிப்பார். எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 6 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (அ-2)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தேசிய ஒருமைப்பாடும் வட மாகாணத்தின் மீள் கட்டமைப்பும் பற்றிய கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சிறப்பு பேச்சாளராக ஜெயந்தா தனபாலா, பேராசிரியர் சாவித்திரி குணசேகர, முன்னைநாள் அருட்தந்தை டுலீப் டீ சிக்கியரா, பேராசிரியர் ரஞ்சினி ஒபயசேகர, திஸ்ஸ ஜெயதிலக, கலாநிதி திருச்சந்திரன், யாவிட் யூசூப், சந்திரா ஜெயரட்ண ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

எனவே இக்கலந்துரையாடலில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் கேட்டுள்ளார். (அ-2)

# ஜெயலலிதாவின் செயற்பாடு கொலையை ஊக்குவிக்கிறது

(கொழும்பு)

ராஜீவ் காந்தியை கொலை செய்த கொலையாளிகளை விடுவிக்கும் ஜெயலலிதாவின் செயற்பாடானது அவர் இந்தியக் குடிமகளா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளதாக தெரிவிக்கும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இச்செயல் கொலைகளுக்கு அனுமதி வழங்குவதாகவுள்ளதென்றும அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்த கொலையாளிகளை விடுதலை செய்யும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் தீர்மானம் பிழையானது.

இது கொலை செய்வதற்கு அனுமதி வழங்கும் பிழையான முன்னுதாரணமாகும்.

இதனை தமிழகத்திலுள்ள தமிழர்கள் மட்டுமல்ல வட இந்தியர்களும் எதிர்க் கின்றனர்.

தனது சுயலாபத்திற்காகவும் தேர்தலின் போது விடுதலை புலி ஆதரவாளர்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு அரசியல் அரசியல் தீர்மானமாகும்.

அரசியலுக்காக நீதியை தூக்கிலிடுவதா? இதனை ஒருபோதும் ஏற்க முடியாது. எனவேதான் நீதியை நிலைநாட்ட மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளது என்று அவர் தெரிவித்தார். (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## நல்லவருக்கு கைகொடுங்கள்



- பிறர் எவ்வளவு தீயவரானாலும் நீங்கள் அவருக்கு கேடு நினைக்காதீர்கள். அதனால், உங்களுக்கு நீங்களே கேடு செய்தவராவீர்கள்.
- எந்த வேலையையும் தன் விருப்பத்திற்குஏற்ப மாற்றுபவரே அறிவாளி. அவரால் எந்தப் பணியிலும் மகிழ்ச்சியோடு ஈடுபட முடியும்.
- ஒருநாள் மனிதன் இறப்பது உறுதி. அதற்குள் ஒரு பெரிய குறிக்கோளை ஏற்றுக் கொண்டு அதற்காக பாடுபட்டு அடைய முயற்சிப்பது நல்லது.
- மனதில் அன்பு நிறைந்தவரே வாழ்ந்து கொண்டு இருக்கிறார். சுயநலம் கொண்டவரோ வாழவே முயற்சிக்கவில்லை.
- முதலில் வேலையாளாக பணியாற்றக் கற்றுக் கொள்ளுங்கள். பின்னர் தானே எஜமானராகும் தகுதி வந்து சேரும்.
- ஒருவரிடத்திலும் பொறாமைப்படாதீர்கள். நன்மை செய்வோர் ஒவ்வொருவருக்கும் கைகொடுக்கத் தயாராய் இருங்கள்.
- துன்பமற்ற இன்பத்தையோ, இன்பமற்ற துன்பத்தையோ உலகில் ஒருவராலும் பெற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வு போட்டிகள் அண்மையில் அதிபர் க.கிருச்ஜ்ஞானந்த தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் இல்ல அலங்காரங்களையும் கயிறிழுத்தல் நிகழ்வையும் படங்களில் காணலாம். (சு-23)

## வலிகாம வலய பெண்களுக்கான உதைபந்து; மாதகல் சென். ஜோசப் வித்தியாலயம் சம்பியன்



மாதகல் சென்.ஜோசப்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக் கிடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்ட வலய மட்டப் போட்டிகள் அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதன் அடிப்படையில் மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலய அணி,தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலயம் ஆகிய அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

இவ் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை மாலை 2 மணி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம் பெற்றன. முதலாவது அரையிறுதியில் மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலய அணி தெல்லிப் பழை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர் கொண்டது.

ஆட்ட நேர நிறைவில் இரு அணிகளும் கோலெதனையும் போடாமையால் போட்டி சமநிலையில் நிறைவுற்றது. சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போது 3:1என்னும் அடிப் படையில் மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலய அணிவெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. மற்றைய அரையிறுதியில் சுன்னாகம் ஸ்கந்தவரோத யாக் கல்லூரி அணி இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலய அணியை எதிர் கொண்டது.

இதில் போட்டி ஆரம்பமாகி சிறிது நேரத்தில் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணி முதலாவது கோலைப் போட்டது. தொடர்ந்து இரு அணிகளும் கோல்களைப் பெற முயற்சித்த போதும் அது கை கூடவில்லை. இதனால் 1:0 என்னும் கோல் அடிப்படையில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலய அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து இடம்பெற்ற 3ஆம் இடத்திற்கான போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியும் மோதியது. இதில் மகாஜனாக் கல்லூரியின் சானுவின் அதிரடியால் அடுத்தடுத்து 3 கோல்கள் போடப்பட்டன. தொடர்ந்து கோல் போட இரு அணிகளும் முயற்சித்தன. இதன் காரணமாக மகாஜனாவின் தர்சிகா மேலுமொரு கோலைப் போட்டார். இதன்படி 4:0 என்னும் கோல்க்கணக்கில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியை வென்று வலிகாமம் கல்வி வலயம் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான உதை பந்தாட்ட வலய மட்டப் போட்டிகளின் 3 ஆம் இடத்தை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலய அணியும் மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலய அணியும் மோதின.

இரு அணிகளும் சம பலம் மிக்கவை என்பதால் போட்டி விறுவிறுப்பாக அமைந்தது. இரு அணிகளும் எதிரணியின் கோல் கம்பங்களை ஆக்கிரமித்த போதும் பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் கோல் பெறப்படவில்லை. போட்டியில் இரு அணிகளும் கோலெதனையும் பெறாமல் சமநிலையில் நிறைவுற்றமையால் சமநிலை உடைப்பு வழங்கப்பட்டது. இதனை சாதகமாக்கிய மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலய அணி 4:3 என்னும் கோல் கணக்கில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலய அணியை வென்று வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்ட வலய மட்டப் போட்டிகளின் சம்பியனாகியது. (சு-23)



இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம்

## வலிகாமம் லீக் கழகங்களுக்கிடையிலான வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டம்

வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற காற்பந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் வெற்றிக்கிண்ணத்திற்காகவே இப்போட்டிகள் இடம்பெறுகின்றன.

வலிகாமம் லீக்கில் பதிவு பெற்ற அங்கத்துவமுடைய கழகங்கள் இப் போட்டிகளில் பங்கு கொள்கின்றன.

காலிறுதிப் போட்டிகள் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்றன. இதில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ்அணியும் தெல்லிப்பழை யூனியன்ஸ் அணியும் மோதியது.

இதில் 1:0 என முதல் பாதியில் கோல் அடிப்படையில் இளவாலை யங்ஹென்றீஸ் அணி முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணி மேலும் 2 கோல்களைப் பெற பதிலுக்கு தெல்லிப் பழை யூனியன்ஸ் அணி ஒருகோலை மாத்திரம் பெற்றது.

இதன்படி போட்டியில் 3:1 என்னும் கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றீஸ் அணி வெற்றி பெற்றது.

இதன் மூலம் அரையிறுதிக்கு இளவாலை யங்ஹென்றீஸ் அணி தகுதி பெற்றது. மற்றைய போட்டியில் அராலி அண்ணா அணியும் பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் அணியும் மோதியது.

இதில் முதற்பாதி முடிவடைய 2 நிமிடங்கள் இருக்கையில் கோல் கம்ப எல்லைக்குள் வைத்து பண்டத்தரிப்பு பிறைற்ஸ்ரார் அணி வீரனின் கையில் பந்துபட்டது. இதற்காக தண்ட உதை வழங்கப்பட்டது. தண்ட உதையின் போது அராலி அண்ணா அணி வீரர் ஒருவர் மைதானத்திற்குள் வந்தமையால் அது அவுட் என நடுவரால் அறிவிக்கப்பட்டது.

எனினும் இதற்கு மீள உதை (Re kick)வழங்கப்பட வேண்டுமென் இரு அணிகளும் கோரியதால் குழப்ப நிலை ஏற்பட்டு போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

போட்டி முடிவில் கூடிய வலிகாமம் லீக் ஒழுக்காற்று குழு மீள உதையை வழங்குவதெனவும் எஞ்சிய நேரத்திற்கான போட்டியை இரு அணிகளும் விளையாட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. போட்டிகளின் இறுதிப்போட்டி இன்று இரவு மின்னொளியில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு-23)

## நெடுந்தீவு பிரதேச இ.கழக விளையாட்டுப் போட்டிகள்

நெடுந்தீவு பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதில் ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. 7 அணிகள் பங்கு கொண்ட இப் போட்டியின் இறுதிப் போட்டியில் சென்.ஜேம்ஸ் இளைஞர் கழக அணியும் சென்.ஜோன்ஸ் இளைஞர்கழக அணியும் மோதின.

இதில் போட்டி நிறைவடைகையில் 0:0 என இரு அணிகளும் சம நிலையிலிருந்தன. சமநிலை உடைப்பு உதை வழங்கப்பட்ட போது 4:2 என்னும் கோல் அடிப்படையில் சென்.ஜேம்ஸ் இளைஞர் கழக அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

ஆண்களுக்கான எல்லே போட்டியின் இறுதிப் போட்டியில் சென். அன்ரனீஸ் இளைஞர் கழக அணியும் சென்.ஜேம்ஸ் இளைஞர் கழக அணியும் மோதின. இதில் சென். ஜேம்ஸ் இளைஞர் கழக அணி சம்பியனாகியது.

பெண்களுக்கான எல்லேப் போட்டியின் இறுதிப் போட்டியில் நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி இளைஞர் கழக அணியும் சென்.ஜேம்ஸ் இளைஞர் கழக அணியும் மோதின. இதில் இரு அணிகளும் சம புள்ளிகளைப் பெற்றமையால் மேலதிக 10 பந்துகள் வழங்கப்பட்டு இதில் நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி இளைஞர் கழக அணி வெற்றி பெற்றது. தொடர்ந்து ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்து, வலைப்பந்து, மென்பந்து கிரிக்கெட், கடற்கரைகரப்பந்துபோட்டிகள் இடம் பெறவுள்ளதாக நெடுந்தீவு பிரதேசஇளைஞர் சேவை உத்தியோகத்தர் ஞா. அமலஜான் அறிவித்துள்ளார். (சு-23)

## நியூவாரியஸ் வி.க.நடத்தும் கரப்பந்தாட்டம்
## ஆவரங்கால் மத்தி சம்பியன்




(மானிப்பாய்)

மல்லாகம் நியூவாரியஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் அண்மையில் மின்னொளியில் இடம்பெற்றது.

இவ் இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடியது. மின்னொளியில் நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் 3:2 என்ற செட் கணக்கில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது. (சு-23)



## இளைஞர் கழகங்களுக்கிடையிலான கபடி, வலைப்பந்தாட்ட போட்டிகள்





சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் பதிவு செய்யப்பட்ட இளைஞர்கழகங்களுக்கிடையிலான கபடிப் போட்டி, வலைப்பந்தாட்ட போட்டிகள் கடந்த சனிக்கிழமை முதல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கபடிப்போட்டியில் டிறிபேக் தாரகை, மோகன்தாஸ் அணி கள் இறுதிப் போட்டியில் மோதின அத னடிப்படையில் 46-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் டிறிபேக் தாரகை வெற்றியை தனதாக்கியது. வலைப்பந்தாட்டத்தின் இறுதிப் போட்டியில் திருநாவுக்கரசு, டிறிபேக் தாரகை அணிகள் மோதிக்கொண்டன. இதில் 18 -00 என்ற புள்ளிகள் அடிப்படையில் திருநாவுக்கரசு இளைஞர் கழகம் வெற்றியை தனதாக்கியது. (அ-23)

## பருத்தித்துறை பிரதேச பெண்களுக்கான எல்லே; சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி



(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பெண்களுக்கான எல்லே போட்டியில் பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.


பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டி தற்பொழுது நடைபெற்று வருகின்றது.


நேற்று முன்தினம் கஜமுகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான எல்லே போட்டியில் பருத்தித்துறை சென்.தோமஸ் விளையாட்டுக்கழகமும் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் மோதியது.

இப்போட்டியில் பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது. நேற்று முன்தினம் இடம் பெற்ற இப் போட்டியை பருத்தித்துறை சமூக சேவை உத்தியோகத்தர் ப.சர்மிலன் ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (சு-19)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீரர்களின் 14-வது போர்
# மகாஜனா-ஸ்கந்தா நாளை பலப்பரீட்சை


மகாஜனா வீரர்கள்


ஸ்கந்தா வீரர்கள்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் போட்டி நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

# ஆசிய கிண்ணம் இன்று ஆரம்பம்

5 அணிகள் பங்குபற்றும் 12-வது ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் இன்றைய தினம் பங்களாதேஷில் ஆரம்பமாகின்றது.

1984-ம் ஆண்டில் இருந்து நடைபெற்று வரும் ஆசியக் கிண்ண போட்டிகளில் 11 தொடர்கள் இதுவரை நிறைவடைந்துள்ளன.

இம்முறை இடம்பெறவுள்ள இத்தொடரில் ஆப்கானிஸ்தான் அணி முதல்தடவையாகப் பங்குபற்றுகிறது.

ஆசியக் கிண்ணத்தை அதிக தடவை வசப்படுத்திய அணியாக இந்திய அணி காணப்படுகிறது. இதுவரை இந்திய அணி 5 தடவைகள் அதனைச் சாதித்துள்ளது.

தவிர இலங்கை அணி 4 தடவைகளும், பாகிஸ்தான் இரு தடவைகளும் ஆசிய கிண்ணத்தை தம்வசப்படுத்தியுள்ளன.

இத்தொடரில் துடுப்பாட்டத்தில் அதிக ஓட்டங்களைக் (1220) குவித்தவராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய காணப்படுகிறார்.

அத்துடன் பந்துவீச்சில் அதிக விக்கெட்டுக்களை (30) சாய்த்தவராக இலங்கை அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் காணப்படுகிறார்.

கடந்த வருடம் பங்களாதேஷில் இடம்பெற்ற ஆசிய கிண்ணப் போட்டிகளின் பரபரப்பான இறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணி 2 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணியிடம் பரிதாபகரமாக தோல்வியுற்று ஆசியக் கிண்ணத்தில் முதல்தடவையாக சம்பியனாகும் வாய்ப்பை இழந்தது.

இன்றைய ஆரம்பப் போட்டியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் பதுல்லவில் பலப்பரீட்சை நடத்துகின்றன. (கு)

# டெஸ்ட் போட்டியில் தோனியை நீக்கி ஹோலிக்கு வாய்ப்பு வழங்கவேண்டும்

## இயன் சப்பல் கருத்து

இந்திய கிரிக்கெட் அணி வெளிநாட்டு மண்ணில் டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து தோல்வியைத் தழுவி வருகிறது. இதனால் அணித் தலைவர் தோனி கடும் விமர்சனத்துக்கு உள்ளனார். அவரை டெஸ்ட் அணியின் தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும என்றும் கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது.

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் காயம் காரணமாக தோனி விளையாட வில்லை. இதனால் வீராட் ஹோலி அணித் தலைவராகப் பணியாற்றுகிறார்.

இதற்கிடையே டெஸ்ட் அணிக்கு வீராட் ஹோலியே பொருத்தமான அணித் தலைவா என்று அவுஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவர் இயன் சப்பல் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது.

ஒருநாள் போட்டியை பொறுத்தவரை தோனி சிறந்த கப்டன். இதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை. மத்திய வரிசையில் களம் இறங்கும் அவர் ஆட்டத்தை சிறப்பாக நிறைவு செய்வார். 20 ஓவர் போட்டியிலும் அவர் தான் சிறந்த கப்டன்.

ஆனால் டெஸ்ட் போட்டியை பொருத்தவரை தோனி சிறப்பாக செயல்படவில்லை. தற்காப்பில் கூடுதல் கவனம் செலுத்துகிறார். அவரால் முழு திறமையுடன் செயல்பட முடியாத நிலை தெரிகிறது.

அவரது செயல்பாடு சிறப்பாக இல்லாததால்தான் வெலிங்டன் டெஸ்டில் இந்திய அணி வெற்றியை பறிகொடுத்தது. மக்குல்லம்- வாட்லிங் ஜோடியை பிரிக்க அவர்





சரியான முறையைக் கையாளவில்லை.

அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தில் 4 டெஸ்டிலும் தோற்று ஒயிட்வாஷ் ஆன பிறகே தோனியை டெஸ்ட் அணித் தலைவர் பொறுப்பில் இருந்து நீக்கி இருக்க வேண்டும்.

தோனி அணித் தலைவர் பதவியில் இருந்து கண்டிப்பாக நீக்கப்படவேண்டும். அவருக்குப் பதிலாக வீராட் ஹோலியை கப்டனாக நியமிக்கலாம். ஆக்ரோஷமாக திகழும் அவர் டெஸ்ட் கப்டன் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர்.

இவ்வாறு இயன்சப்பல் கூறியுள்ளார்.




# இங்கிலாந்து தொடர்; ஹெய்ல் விலகல்




இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் போட்டி மற்றும் மூன்று 20 ஓவர் போட்டிகளில் விளையாடுகிறது.

இரு அணிகள் இடையேயான ஒருநாள் தொடர் 28-ந்தேதி தொடங்குகிறது. மேற்கிந் தியத் தீவு அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கிறிஸ் ஹெய்ல் காயம் காரணமாக ஒருநாள் தொடரில் விளையாடவில்லை.

அயர்லாந்துக்கு எதிரான 20 ஓவர் போட்டியில் அவருக்கு முதுகு பகுதியில பிடிப்பு ஏற்பட்டது. இதன் காரணமாகவே ஹெய்ல் இங்கிலாந்து ஒருநாள் தொடரில ஆடவில்லை. அவருக்கு பதிலாக வெய்ன் சுமித் சேர்க்கப்பட்டு உள்ளார்.

அயர்லாந்துக்கு எதிரான ஒரே ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவு 4 விக்கெட்டில் வெற்றி பெற்றது. முதலில் விளையாடிய அயர்லாந்து 49.2 ஓவரில 202 ரன்னில் சுருண்டது. பின்னர் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 36.4 ஓவரில 6 விக்கெட் இழப்புக்கு 205 ரன் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

# குளிர்கால ஒலிம்பிக்; ரஷ்யா முதலிடம்



ரஷ்யாவின் சோச்சி நகரில் கடந்த 7-ம் திகதி தொடங்கிய குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நேற்றுடன் நிறைவடைந்தது.

சுமார் 50 பில்லியன் யூரோக்கள் செலவில் வெகு பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விளையாட்டு போட்டிகள் தொடர்ந்து 16 நாட்கள் நடைபெற்றன.

2900 வீரர்-வீராங்கனைகள் போட்டியிட்டனர். இந்த போட்டிகளை நடத்திய ரஷ்யா அதிக பதக்கங்களை வென்று பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளது. 13 தங்கம், 11 வெள்ளி, 9 வெண்கலம் என மொத்தம் 33 பதக்கங்களை ரஷ்ய வீரர்- வீராங்கனைகள் கைப்பற்றியுள்ளனர்.

மிகுந்த எதிர்பார்ப்புடன் களமிறங்கிய அமெரிக்க விளையாட்டு வீரர்-வீராங்கனைகள் பெரிதாக சோபிக்க முடியாமல் நோர்வே மற்றும் கனடாவுக்கு அடுத்த மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்தது.

11 தங்கம், 5 வெள்ளி, 10 வெண்கலம் என 26 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் இரண்டாம் இடத்தை நார்வே தக்கவைத்து கொண்டது.

10 தங்கம், 10 வெள்ளி, 5 வெண்கலம் என 25 பதக்கங்களை பெற்ற கனடா 3-வது இடத்தை பெற, அதற்கு அடுத்த நான்காவது இடத்தை 9 தங்கம், 7 வெள்ளி, 12 வெண்கலம் என 28 பதக்கங்களை வென்ற அமெரிக்கா பிடித்துள்ளது.

இதற்கு அடுத்த நிலைகளில் 8 தங்கம், 7 வெள்ளி, 9 வெண்கலம் என 24 பதக்கங்களை பெற்ற நெதர்லாந்தும், 8 தங்கம், 6 வெள்ளி, 5 வெண்கலம் என 19 பதக்கங்களை வென்ற ஜேர்மனியும், 6 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலம் என 11 பதக்கங்களை கைப்பற்றிய சுவிட்சர்லாந்தும் உள்ளன.

நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட வண்ணமயமான வாணவேடிக்கைகளும், கண்கவரும் கலைநிகழ்ச்சிகளும் பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்தியது.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச் சங்க மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி ம. தயாளநேசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி கொக்குவில கிளை முகாமையாளர் ப.செல்வகுமார், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் திருமதி சி.விஸ்வலிங்கம், கௌரவ விருந்தினராக எச்என்பி உதவி முகாமையாளர் திருமதி தர்ஷிகா பிரசன்னாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதைகுழி அகழ்வு ஒத்திவைப்பு

(திருக்கேதீஸ்வரம்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள மனித புதைகுழியிலிருந்து நேற்றும் இரண்டு மண்டையோடுகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று 31ஆவது நாளாகவும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றது.

இந்த மனித புதைகுழியில் இருந்து இதுவரை 81 மண்டையோடுகளும் எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.

திருக்கேதீஸ்வரம் பகுதியில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் நீர்க்குழாய் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்களால் இந்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இந்த மனித புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இதேவேளை மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு மார்ச் 5 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## விபத்தில்...

துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

## கொள்ளையர் தாக்குதல்; இலங்கையர் காயம்

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பிரதேசத்தில் உள்ள இலங்கையில் பிறந்த பத்திரிகை முகவர் ஒருவர் ஆயுதம் தாங்கிய கொள்ளையர்களின் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

லிட்டில் மோர் நியூஸ் என்ற பத்திரிகை விற்பனை நிலையத்தை நடத்தி வரும் உள்ளூரில் கரு என அறியப்பட்ட விஜயபண்டார கருணாரட்ன என்ற இலங்கையர், கத்தி மற்றும் சுத்தியலுடன் முகமூடி அணிந்து சென்ற இரண்டு நபர்களினால் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

விற்பனை நிலையத்தின் உரிமையாளரான அவர், லிட்டில் மோர் பெரிஷ் நகர உறுப்பினராகவும் இருந்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விற்பனை நிலையத்திற்குள் சென்ற கொள்ளையர்கள், கடுமையாக தாக்கியும் கத்தியால் தாக்கியும் காயம் ஏற்படுத்தி விட்டு பணத்தை எடுத்து கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றும் நேற்றிரவும் கொள்ளையர்களை கைது செய்ய சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார், அவர்களை கைது செய்வதற்கான தகவல்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். கொள்ளைச் சம்பவத்திற்கு பின்னர் கொள்ளையர்களை பின் தொடர்ந்தும கைது செய்ய பொலிஸார் ஹெலிகொப்டரையும் பயன்படுத்தி தேடுதல் நடத்தினர். (எ-11)

## வடக்குக்கான உதவியினை...

வடக்கு முதலமைச்சரின் வாசஸ் தலத்திற்கு மாலை 6 மணி யளவில் வருகைதந்த இந்தக்குழு வினர் முதலமைச்சருடன் சந்திப் பில் ஈடுபட்டனர்.

இந்தச்சந்திப்பு தொடர்பாக முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் சார்பாக அதிகமாக என்னுடன் பேசவில்லை. ஆனால் அரசியல் தொடர்பில் எந்த அளவுககு எங்களுடைய நடவடிக்கைகளை செய்ய முடியும் என்று கேட்டிருந்தார்.

எங்களுக்கு எங்களுடைய அரசியலில் இருக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக அவருக்கு சொல்லியிருந்தேன்.

குறிப்பாக அரசியலைக் கொண்டு நடத்துவதற்கு உள்ள சிரமங்கள் தொடர்பாக சொல்லியிருந்தேன்.

ஜேர்மன் தூதுவர் கடந்த இரண்டு வருடமாக இந்த பதவியில் இருப்பதனால் இங்கு நடக்கும் அனைத்தினையும் அறிந்து வைத்திருப்பார்.

ஆனால் கடந்த 60 வருடமாக ஜேர்மன் நாட்டு மக்களுடன் எங்களுக்கு தொடர்பு இருந்து வந்துள்ளது.

இருப்பினும் தற்போது வடபுலத்தில என்ன நடக்கின்றது என்பதனைப் பார்த்துக் கொண்டு செல்லவே அவர் இங்கு வந்துள்ளார். இதில் என்னையும் சந்தித்துள்ளார்.

பலவிதங்களில் இந்த நாடுகளில் இருந்து வரும் உதவிகளை இந்த அரசாங்கம் கட்டுப்படுத்திவருகின்றது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சம்மந்தமாக அவர்களுடைய உதவிகளை தந்து வருகின்றார்கள்.

ஆனால் அரசாங்கம் இப்போது ஊவா மாகாணத்திலும் பிரச்சினைகள் இருக்கின்றது. இதனால் அங்குள்ள மக்களுக்கு உங்களுடைய உதவிகளை தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு, அப்படி இல்லை போரின் பின்னர் மக்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருக் கின்ற படியால், வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குத்தான் அந்த உதவிகளை செய்ய முடியும் என்று கூறி தற்போது உதவித்திட்டங்கள பலவற்றினை நடைமுறைப் படுத்தி வருகின்றார்கள்.

எந்த அளவிற்கு எவ்வளவு காலத்திற்கு இந்த உதவித்திட்டங்கள் இங்கு நடைமுறைப்படுத்தப் படும் என்பது அவர்களுக்கும் தெரியாமல் இருக்கின்றது.

ஏனென்றால் பல விதங்களிலும் தங்கள் நாடுகளை அரசாங்கம் குறை சொல்லிக் கொண்டு இருக்கின்றது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் எங்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளை நாங்கள் மறக்கக் கூடாது.

உதாரணமாக தொழில் சார்பான பயிற்சி நிறுவனங்களை அமைத்து வருகின்றார்கள்.

எங்களுக்கு சகல விதங்களில் உதவி புரிகின்றார்கள்.

தமிழ் மக்களோடு ஒன்றிணைந்து செயற்பாடுகள் பலவற்றினை அவர்கள் செய்து வருகின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-4,6)

## விசாரணை...

சாங்கம்கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப் பட உள்ள அறிக்கையை நவநீதம் பிள்ளை இலங்கைக்கு அனுப்பியிருந்தார்.

அதற்கு இலங்கை அரசாங்கம பதிலையும் அனுப்பியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என நவிபிள்ளை அந்த அறிக்கையில் கூறியிருந்தார். (எ-11)

## மத்திய அரசின்...

ஆகியோரின் தூக்கு தண்டனையை உச்ச நீதிமன்றம் ரத்து செய்து ஆயுள் தண்டனையாக குறைத்தது. மேலும் இவர்களது விடுதலை குறித்து மாநில அரசு முடிவு செய்யலாம் என்று நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்திருந்தனர்.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, சிறையில அடைக்கப்பட்டுள்ள, சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ரொபர்ட் பயஸ், ஜெயகுமார் மற்றும் ரவிச் சந்திரன் ஆகிய 7 பேர் விடுவிக்கப் படுவார்கள் என்ற அறிவிப்பை சட்ட சபையில் தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டார்.

இந்நிலையிலேயே இவர்களின் விடுதலைக்கு எதிராக மத்திய அரசினால் உச்ச நீதி மன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-11)

## ஆயுத விநியோகத்தில்...

எடுத்துச் சென்றனர். அந்த கொள்கலன்களில் இப்படியான அமைப்புகளுக்கு வழங்கும் ஆயுதங்கள் இருந்திருக்கக் கூடும்.

சுங்க விசாரணைகள் இன்றி வெளியில் எடுத்துச் செல்லப்பட்ட இரண்டு கொள்கலன்களில் சட்ட விரோத பொருட்கள் இருந்திருக்கும் என்பது தெளிவானது.

ஹெரோயின், எதனோல் அல்லது துப்பாக்கிகள் அதில் இருந்திருக்க கூடும். தற்போது ஏன் துப்பாக்கிகள் தேவைப்படுகிறது. புதிதாக பயங்கரவாத மற்றும் அடிப்படைவாத அமைப்புகள் உருவாக்கி வருகின்றன.

நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த சமாதானத்தை சீர்குலைத்து, நாட்டை அதலபாதாளத்திற்குள் தள்ளி விடுவதற்காக பயங்கரவாத அமைப்புகள் மெதுமெதுவாக தலை தூக்க ஆரம்பித்துள்ளன.

உருவாகி வரும் பயங்கரவாத அமைப்புகளுக்கு அமைச்சர்களின புதல்வர்களே துப்பாக்கிகளை விநியோகித்து வருவதாக எண்ணத் தோன்றுகிறது என ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார். (எ-11)

## ஏழு பேரையும் விடு...

மத்திய அரசு எதிர்ப்பு தெரிவித்து உச்சநீதிமன்றத்தை நாடியுள்ளது.

உச்சநீதிமன்றமும் 7 பேரின் விடுதலைக்கு இடைக்காலத் தடை விதித்து தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்த நிலையில் நேற்று சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த தமிழக முதல்வர் ஜெயலலிதா,

பேரறிவாளன் உட்பட 7 பேரின் விடுதலையை மத்திய அரசு எதிர்க்கும் என்பது எதிர்பார்த்ததுதான.

அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வார்கள் என்பதும் தெரியும்.

சட்டப்படி என்ன செய்ய முடியுமோ அதை ஆராய்ந்து செய்வோம் என்றார். (எ-11)


### விற்பனைக்கு

கொங்கிறீட் கல் அரியும் இயந்திரம், 8x6' அளவுடைய கடைக்குரிய நிலைக்கதவுகள் இரண்டு. முதிரை, பாலைமரத்திலானவை இரண்டு மாதம் நிரம்பிய புச்சிநீக்கப்பட்ட, பொமேரியன்நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு. 0774366704


### மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- கண்ணா

4 1/2 ரக்ரர் - 19000 /- 0777 590 792

(C-6581)


## நன்றி நவிலல்



திருமதி
**பத்மாஜனி விசுவலிங்கம்**

இளைப்பாறிய வட மாகாண கல்வி ஆலோசகர் திரு.விஸ்வலிங்கம் அவர்களின் மனைவி காலஞ்சென்ற திருமதி பத்மாஜனி விசுவலிங்கம் அவர்களின் மரணச் செய்தி அறிந்து வருகை தந்தும் தொலைபேசி அழைப்புக்களாலும் எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம் :- திருமதி சுபத்திரா சூரியநாதன்
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

(3685)


### புகழ் வெளிவந்துவிட்டது

**புகழ் வெளியீட்டகத்தின் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான அலகுப்பரீட்சை வினாத்தாள்கள், தவணைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் அடங்கிய விசேட பயிற்சிப் பொதி**

- 40 நிமிட அலகுப் பரீட்சை வினாத்தாள்கள்
- தவணைப்பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் அனைத்தும் முழுமையான புள்ளித்திட்டத்துடனான விடைகளுடன்.

கணிதம் • தமிழ் • சுற்றாடல் • ஆங்கிலம்

நகரிலுள்ள அனைத்துப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். பாடசாலைகள், கல்வி நிலையங்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்

விலை :- 150 /-

புகழ் வெளியீட்டகத்தின் தரம் 5 மாணவர்களுக்கான ஏனைய வெளியீடுகள்

- 'புகழ்' புலமைப்பரிசில் வழிகாட்டி - (பகுதி I, பகுதி IIக்கான முழுமையான விடயங்களுடன் முதல் முதலில் வெளிவந்த நூல்)
- சுற்றாடல்கள் செயற்பாடுகள் - தேர்ச்சிகளுக்கமைவாக தயாரிக்கப்பட்டது.
- +50/200 தமிழ் மொழி விடயங்களும் பயிற்சிகளும்.
- 20-20 - விசேட பயிற்சி வினாத்தொகுப்பு நூல் (ஒரு மணி நேரத்தில் வகுப்பறையில் செய்யக் கூடிய 20 பயிற்சிகள்)

தொடர்புகளுக்கு :- 077 411 8950
புகழ் பப்ளிகேசன், கொக்குவில் மேற்கு
யாழ்ப்பாணம்.

(3683)


## நோ பயர் ஸோன்...

இந்திய தணிக்கை குழு நோ பயர் ஸோன் காணொளியை தடை செய்தமையானது, இந்தியாவின் கருத்து சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம் மீதான மீறல் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுக கப்படுகின்ற வேளையில் அந்த அழுத்தத்தை நீரத்துப் போகச் செய்யும் வகையில் தணிக்கை குழு செயற்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

கெலம் மக்ரே தயாரித்த இந்த காணொளியானது, கொடூரமான காட்சிகளை கொண்டிருப்பதாகவும், இந்திய மற்றும் இலங்கை உறவை பாதிக்கும் என்ற அடிப்படையிலும் இந்திய தணிக்கை குழு தடை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## நாடுகடந்த தமி...

விற்கு இந்த விடயம் தொடர்பான தகவல்கள் தெரியவந்துள்ளதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர், தென்னாபிரிக்காவின் அரசாங்க உயர் அதிகாரிகளை சந்தித்து வினவியபோது, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஒன்றிற்கு தமது ஆதரவு இல்லை என அவர்கள் குறிப்பிட்டதாகவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் ஆயுதங்கள் கொண்டு பெறமுடியாத தமிழீழத்தை, புலம்பெயர்ந்தவர்களின் துணை கொண்டு உருத்திரகுமார் பெற முயலவதாகவும் அவர் தெரிவித்தார். (எ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org